பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as ...

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 14 செவ்வாய்க்கிழமை (27.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 182

# ரயில் குண்டு வெடிப்பில் 9 பேர் பலி!

# தெஹிவளையில் மாலை நேர அனர்த்தம்!!

## பயணிகள் நிறைந்து வழிந்த பெட்டியில் கோரம்



கொழும்பு, மே 27

கொழும்பில் தெஹிவளைக்கு அருகே பயணிகள் ரயில் பெட்டி ஒன்றில் நேற்று மாலை திடீரென ஏற்பட்ட குண்டு வெடிப்பில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் உட்பட ஒன்பது பொதுமக்கள் வரை உயிரிழந்தனர். எழுபத்திமூன்று பேர் படுகாயமடைந்தனர். பயணிகள் நிறைந்து வழிந்த பெட்டி ஒன்றிலேயே இந்தக் கொடூரம் நிகழ்ந்திருக்கின்றது. (12ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவு குண்டுச் சத்தம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்.கோயில் வீதியும் ஆஸ்பத்திரி வீதியும் இணையும் சந்திப் பகுதியில் நேற்றிரவு சுமார் 7மணிக்குச் சற்றுப் பின்னராக குண்டு வெடிப்புச் சத்தமும் துப்பாக்கி பிரயோகமீ செய்யப்படும் சத்தமும் கேட்டன. அந்த நேரம் மின்தடை அமுலில் இருந்தது.

சேதவிவரங்கள் குறித்து உறுதியான தகவல் கிடைக்கவில்லை.

(அ-01)

**தரம் - 5 புலமைப் பரிசில்**
**இலகுவழிப்பயிற்சி**
**வினாத்தாள் உள்ளே**

## இராணுவத்துக்கு முகம் கொடுக்க முடியாது புலிகள் பொதுமக்களை தாக்குகின்றனர்

### அரசதரப்பில் கண்டனம்

கொழும்பு, மே 27

தெஹிவளையில் பொதுமக்கள் பயணம் செய்த ரயிலில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலை அரசு மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைக்கு முகம் கொடுக்க முடியாத புலிகள் அப்பாவிப் பொதுமக்களைத் தாக்குகின்றனர்.

- இவ்வாறு தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து அரச தொலைக்காட்சிச் சேவையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசு மேற்கொண்டுவரும் தீவிர இராணுவ நடவடிக்கைகளுக்கு முகம்கொடுக்க முடியாத புலிகள், அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். புலிகளின் இவ்வாறான தாக்குதல் களை முறியடிப்பதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம். சந்தேகத்திற்கிடமான நபர்கள் மற்றும் பொதிகள் குறித்துப் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் மீது அதிரடிப்படை சூடு! ஏறாவூரில் முஸ்லிம் பெண்ணொருவர் பலி; மூவர் படுகாயம்!!

மட்டக்களப்பு, மே 27

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதான வீதியில் நேற்று மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் முஸ்லிம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

கடந்த வியாழக்கிழமை இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட இரு முஸ்லிம் இளைஞர்களையும் விடுவிக்கக் கோரி அந்தப் பகுதியில் மக்கள் கூட்டமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் விசேட அதிரடிப்படையினர் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி ஆர்ப்பாட்டத்தைக் குழப்ப முயற்சித்தனர் என்றும், அதனையும் மீறி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது அதிரடிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் நூர்முகம்மது ஜிப்றியா (வயது - 50) என அடையாளம் காணப் (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பதற்றம் நீடிப்பு

மட்டக்களப்பின் காத்தான்குடி, ஆரையம்பதி மற்றும் ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய பகுதிகளில் நேற்றும் பதற்றமான சூழ்நிலை தொடர்ந்து காணப்பட்டதாக அறியவந்தது.

அப்பகுதிகளில் பெருமளவிலான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

அந்தப் பகுதிகளில் கடந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## மின் கட்டணம் உயராதாம்

கொழும்பு, மே 27

நாட்டில் எரிபொருள்களின் விலை அதிகரித்தாலும் மின்கட்டணங்களில் தற்போது எதுவித மாற்றமும் ஏற்படாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைச்சு மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து இலங்கை மின்சாரசபைக்கு மானிய விலையில் தொடர்ந்தும் எரிபொருள்களைப் பெற்றுக்கொள் (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தீர்வில் அரசு தீவிரம் அதுவே நெருக்கடிக்குக் காரணம்

### காஷ்மீரில் வைத்து சந்திரிகா கருத்து



காஷ்மீர், மே 27

இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் இராணுவத் தீர்வில் மாத்திரம் ஆர்வம் கொண்டுள்ளனர் எனக் காஷ்மீரில் வைத்துக் கருத்துத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இப்போக்குக் காரணமாகவே இலங்கை நெருக்கடி தீவிரமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீர் குறித்த கற்கைநெறிகளுக்கான இந்திய நிறுவகத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட வேளையே இவர் இதனைத் தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, மே 27

மூதூர் கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்குத் தடைவிதித்து படையினர் மேற்கொண்டுள்ள கெடுபிடியை ஆட்சேபித்து மூதூர் மீனவர்கள் நேற்றுக்காலை மூதூர் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். (12ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை உயர்வை எதிர்த்து கொழும்பில் இன்று மாட்டுவண்டி ஊர்வலம்!

கொழும்பு, மே 27

எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ஐக்கிய (12ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் கட்டணங்கள் இன்று முதல் குடாநாட்டிலும் உயர்கின்றன

யாழ்ப்பாணம் மே27

எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக, குடா நாட்டிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைக் கட்டணங்கள் இன்று முதல் உயர்த்தப்படுகின்றன.

இலங்கை போக்குவரத்துச்சபை (வடக்கு) யின் பிராந்திய முகாமையாளர் எஸ்.கமலநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

புதிய கட்டணத்தின் பிரகாரம் - ஆறு ரூபாவாக இருந்த ஆகக்குறைந்த கட்டணம் 6 ரூபாவாகவே இருக்கும். ஆகக் கூடுதலாக இருந்த 46 ரூபா (2ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ஹெலித் தாக்குதல்

கொழும்பு, மே 27

மன்னாரில் அரச படைநிலைகளில் இருந்து வடக்கே சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தொலைவில் ஆண்டான்குளம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முன் (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர்த் தாக்குதலைக் கண்டித்து வவுனியாவில் நேற்று ஹர்த்தால்

வவுனியா, மே 27

வன்னிப் பிரதேசத்திலுள்ள முறிகண்டி மற்றும் மல்லாவி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதல்களைக் கண்டித்து நேற்று வவுனியா மாவட்டம் முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவிலுள்ள பாடசாலைகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அமைச்சர் டக்ளஸ் மக்களிடம் தெரிவிப்பு:

# வடக்கில் சுமுகநிலையை ஏற்படுத்துமுகமாக பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் முன்னெடுப்பு

### மக்களின் கணிசமான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இயலும்



யாழ்ப்பாணம்,மே27

வடக்கில் சுமுக நிலையை ஏற்படுத்து முகமாக பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்குப் பொதுமக்களின் பங்களிப்பு இன்றியமையாதது. மக்கள் நலன் சார்ந்த மேம்பாட்டுத் திட்டங்களை பொதுமக்களின் பங்களிப்புடன் முன்னெடுப்பதன் மூலம் நாளடைவில் குடாநாட்டு மக்களின் கணிசமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலும்.

இவ்வாறு தெரிவித்தார் சமூகசேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

தங்கள் பிரச்சினைகள் குறித்து அமைச்சரைச் சந்திப்பதற்கு நேற்று அமைச்சு அலுவலகத்துக்குச் சென்ற நூற்றுக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பொதுமக்கள் நேற்று அமைச்சரைச் சந்தித்து தங்களது பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளை முன்வைத்தனர். அவற்றுள் உடனடியாகத் தீர்க்கப்படக் கூடிய பிரச்சினைகள் அமைச்சரால் உரிய தரப்பினருடன் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு தீர்க்கப்பட்டன. ஏனைய பிரச்சினைகளை வெகுவிரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் உறுதி அளித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது சுமுகமானதொரு நிலை ஏற்பட்டு வருகின்ற போதிலும் ஒருசில புல்லுருவிகளால் தீய செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு இனங்களுக்கிடையில் கசப்புணர்வைத் தூண்டும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் இவ்வாறான செயற்பாடுகளை தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அத்துடன் இவ்வாறான செயல்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் இருப்பதற்கு பொதுமக்கள் இவற்றைக் கண்டிக்கவும் தடுத்து நிறுத்தவும் ஒன்றிணைந்து முன்வர வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கிழக்கில் நடைபெறும் சம்பவங்களால் தனது தோழர்கள், உறவினர்கள், நண்பர்களை, இழந்த சோகம் தனக்கிருப்பதாகவும் அதே நேரம் எமது சமுதாயத்தின் சோகத்தையும் தான் நன்கு உணர்ந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

வெகுவிரைவில் வடக்கில் சுமுகமான தொரு நிலை தோன்றும் எனும் நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் இந்த நம்பிக்கையுடன் முன்நோக்கி நகர் வதற்கு பொது மக்கள் அணிதிரண்டு முன்வர வேண்டும் - என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார். (அ)

## 'மானுடம்' இன்று வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், மே 27

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் 'மானுடம்' சமூகவியல் ஏட்டின் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. ஒருமணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நூலை வெளியிடுவதுடன் வெளியீட்டுரையையும் நிகழ்த்துவார்.

நூல் ஆய்வுரையை வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார்.

வாழ்த்துரைகளை கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஸ்ணராஜா, சமூகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்துவர். (அ-2)

## இளைஞர்கள் இருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், மே 27

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று முறையிடப்பட்டிருக்கின்றது.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் திருத்துநரான செல்வராசா எபின் ராஜ் (வயது 19), சரசாலையைச் சேர்ந்த சேர்ந்த கூலித் தொழிலா ளியான கந்தசாமி ஹரிகரன் (வயது 21) ஆகியோரே காணமல் போயுள்ளனர் என முறையிடப்பட்டுள்ளது. (அ-02-25)

### பஸ் கட்டணங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டணம் 55 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டண விவரம் வருமாறு:

| பழைய கட்டணம் கட்டணம்(ரூபா) | | புதிய கட்டணம்(ரூபா) |
|---|---|---|
| 6.00 | - | 6.00 |
| 8.00 | - | 9.00 |
| 11.00 | - | 12.00 |
| 14.00 | - | 16.00 |
| 16.00 | - | 18.00 |
| 19.00 | - | 21.00 |
| 21.00 | - | 24.00 |
| 23.00 | - | 26.00 |
| 24.00 | - | 28.00 |
| 26.00 | - | 30.00 |
| 27.00 | - | 32.00 |
| 28.00 | - | 34.00 |
| 29.00 | - | 35.00 |
| 30.00 | - | 37.00 |
| 32.00 | - | 39.00 |
| 33.00 | - | 40.00 |
| 35.00 | - | 42.00 |
| 36.00 | - | 44.00 |
| 38.00 | - | 45.00 |
| 39.00 | - | 47.00 |
| 40.00 | - | 49.00 |
| 42.00 | - | 50.00 |
| 43.00 | - | 52.00 |
| 45.00 | - | 54.00 |
| 46.00 | - | 55.00 |


**உடன் விற்பனைக்கு**

மொறிஸ் -ஒஸ்ரின் A50-A40 கார்கள் கலிபர் 115 மோட்டார் சைக்கிள் டைனமோ 3 K.V. 3000 R.P.M டிஜிற்றல் வீடியோ கமரா பனசொனிக் வீட்டுத் தளபாடங்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: Dr.ஜெயலன்

கலட்டி அம்மன் வீதி,

யாழ்ப்பாணம். 0775594147, 222 3198


## கண்ணீர் அஞ்சலி



### யோசப் மரியதாஸ் (சின்னராசா)

யோசப் மரியதாஸ் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஈச்சமோட்டை
சனசமூக நிலையம்.

## சர்வதேச குடும்பநல சேவை உத்தியோகத்தர் தினம்-2008

நயினாதீவு பிரதேசத்தில் கடமையாற்றும் குடும்ப நல சேவை உத்தியோகத்தர் தின விழா நாளை (28.05.2008) புதன்கிழமை 10.00 மணிக்கு நயினாதீவு பிரதேச சபை நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திரு.கே.என்.சச்சிதானந்தம் (பொறுப்பதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊர்காவற்றுறை) அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். அனைவரையும் வருகைதருமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

**விழா ஒழுங்கமைப்பாளர்,**
நயினாதீவு.

(74498)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி சிவநேசராணி கந்தையா அவர்களின் அன்புத் தாய்

### திருமதி சிவபாக்கியம் கந்தையா

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.



## கண்ணீர் அஞ்சலி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.வலய உப செயலாளரும் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஆசிரியையுமான

### திருமதி விஜயானந்தி ஜெகதீஸ்வரன்

(B.Sc. Hons, P.G.D.E, M.Ed)

அவர்களின் அகால மறைவினால் அதிர்ச்சியும் துயரும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!ஓம் சாந்தி!!!

(74494)

**யாழ்.வலயம்,இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.**

## 31ம் நாள் நினைவு தினம்

மண்ணின் மடியில்
19 * 04 * 1956



ஆண்டவன் அடியில்
27 * 04 * 2008

### உயர் திரு மயில்வாகனம் அரியநாயகம்

(புலோலி ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்)

அன்பும் அறனும் மிக்க ஆருயிர்த் துணைவனாய்
பாசமுள்ள தந்தையாய் பண்பு மிகு சுற்றமாய்
உழைப்பாலுயர்ந்த உத்தமனாய்
உறவினரை மதிக்கும் நல்லன்பனாய்
வாழ்ந்தீர் அந்தோ அவ்வாழ்வு
பாதியில் முடிவுற்றதோ ஐம்பத்திரண்டு
வாழ்வில் நோயுருவிற் காலன் கைப்பட்டீரோ
நம்பிரிவால் எம்முள்ளம் கலங்குகிறோம்
நிகழ்ந்தது கனவோ? நிசமோ? என்று
என்மனம் அமைதியிழந்து ஏங்குகிறோம்
நினது ஆன்மா சாந்தியுற்று நற்கதியடைய
எம் பெருமானைத் தியானித்து உருகுகிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புலோலி தெற்கு
புலோலி.

சகோதரர்கள்,
மைத்துனர்கள்

## மரண அறிவித்தல்கள்

### சிவசுப்பிரமணியம் சிவசோதிநாதன்

(Siva S.Nathan)

(FI Diag E,.MI. DGTE (U.K) Associate Broker



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சிவசோதிநாதன் 25.05.2008 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் சுஜந்தாவின் பாசமிகு தகப்பனும் சுபேந்திரனின் மாமனும் அருணின் பேரனும் காலஞ்சென்ற தம்பிராஜா கனகம்மா (Canada) தம்பதியினரின் மருமகனும், மகேஸ்வரி (Malasiya), அமரர் பத்மநாதன், அமரர் பத்மராணி, புஸ்பராணி (U.K) இந்திராணி (உரும்பிராய்), ஸ்ரீரங்கநாதன் (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்லத்துரை (Malasiya), சத்தியதேவி (U.K), நடேசன் (U.K), நாகரட்ணம் (U.K), பாலசுப்பிரமணியம் (உரும்பிராய்), லதா (Canada) மகேஸ்வரன் (ஏழாலை), யோகேஸ்வரன் (Canada) ஆகியோரின் மைத்துனருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராணி வாசம்,
உரும்பிராய் வடக்கு.
காந்திகா இல்லம்,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

தகவல்:
பா.இந்திராணி (சகோதரி)
த.மகேஸ்வரன்
(மைத்துனர்)

(74495)

### இராமலிங்கம் சிவயோகம்

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் தாழையடி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவயோகம் நேற்று (26.05.2008) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் ரேணுகா, அம்பிகை பாகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்மலிங்கம் ஜெயந்தி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*22,தாழையடி லேன்,*
*திருநெல்வேலி தெற்கு,*
*திருநெல்வேலி.*

தகவல்:
நீ.அருட் செல்வி
(மகள்)

(74499)



### யோசேப் மரியதாஸ் (சின்ராசா)

(முன்னாள் C.T.P உத்தியோகத்தர்)

ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் மரியதாஸ் அவர்கள் 25.05.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் மற்றும் தங்கமுத்து, தம்பதியினரின் மகனும் இராசம்மாவின் (தங்கரத்தினம்) அன்புக் கணவரும் சுதாஜினி, சுபாஜினி, சுரேஸ் (டோகா), சுகந்தினி ஆகியோரின் தந்தையும் யோகராசா, ஜெகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், இம்மானுவேல், மலர், இந்திராணி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சாந்தம்மா, நவரட்ணம், சோதிலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சுலோஜன், வினோஜன், நிரூஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.05.2008) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்த்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*72, ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்*

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடத்தனையில் உள்ள

# பனை அபிவிருத்திச் சபையின் காணியில் புல் வளர்ப்பதற்கு உ.அ.அதிபர் ஆலோசனை

வடமராட்சி, மே27

குடத்தனையில் உள்ள இலங்கை பனை அபிவிருத்திச்சபைக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியில் புல் வகைகளை வளர்ப்பதன் மூலம் கால்நடைகளை வளர்ப்பை ஊக்குவிக்கலாம். இதற்கு பனை அபிவிருத்திச்சபையின் சாதகமான பதிலை வடமாட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் எதிர்பார்த்துக் காத்திருப்பதாக உதவி அரசாங்க அதிபர் மா. சிறிஸ்கந்தகுமார் தெரிவித்தார்.

இக்காணியை சுற்றி வேலி அடைத்து புல்லை வளர்ப்பதால் கால்நடைக்ளை வளர்க்க உதவியர்க இருக்கும். அத்துடன் மாளிகைத்திடலில் உள்ள குடும்பங்கள் ஆடு வளர்ப்பதால் பலவிதப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பனை அபிவிருத்திச் சபை சாதகமான பதிலை வழங்கினால் இக் காணிக்கு வேலி அடைத்து ஒரு பகுதியை ஆடு வளர்ப்பதற்காக மாளிகைத்திடலில் வசிப்போருக்கு வழங்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(202-236)

# யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 27

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் ஏற்றப்படவுள்ளன.

தடுப்பூசி ஏற்றப்பட்ட இடங்களின் விவரம் வருமாறு:

**யாழ்.நகரப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு:**

2 ஆம் திகதி: காலை 9 - 12 மணிவரை நாவலர் கலாசார மண்டபம். பிற்பகல் 2 - 3.30 மணிவரை அருள்மாதா சனசமூக நிலையம்.

3 ஆம் திகதி: காலை 9 - 12 மணிவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்பாகவுள்ள றக்கா வீதி. பிற்பகல் 2 - 3.30 கோயில் ஒழுங்கை, இராசாவின் தோட்டம்.

4 ஆம் திகதி: காலை 9 - 12 மணிவரை புகையிரத நிலைய விடுதி, ஸ்ரான்லி வீதி. பிற்பகல் 2 - 3.30 மணிவரை அத்தியடி பிள்ளையார் கோயிலடி.

5 ஆம் திகதி: காலை 9 - 12 மணிவரை குருநாதர் சுவாமி கோயிலடி, ஆனைப்பந்தி. பிற்பகல் 2 - 3.30 மணிவரை ஞானக் குழந்தை பாலர் பாடசாலை, யாழ்.வீதி.

6 ஆம் திகதி: காலை 9 - 12 மணிவரை பெருமாள் கோயிலடி. பிற்பகல் 2 - 3.30 மணிவரை கன்னாதிட்டி காளிகோயிலடி.

9 ஆம் திகதி: காலை 9 - 12 மணிவரை மாட்டீன் வீதி. பிற்பகல் 2 - 3.30 மணிவரை யாழ்.அடைக்கல அன்னை தேவாலய வளாகம். (O.L.R.)

10 ஆம் திகதி: காலை 9 - 12 மணிவரை சிறாம்பியடி ஒழுங்கை. பிற்பகல் 2 - 3.30 மணிவரை 5 ஆம் குறுக்குத் தெரு.

11 ஆம் திகதி: காலை 9 - 12 மணிவரை கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலையம். பிற்பகல் 2 - 3.30 மணிவரை கொட்டடி மீனாட்சி அம்மன் கோயிலடி.

12 ஆம் திகதி: காலை 9 - 12 மணிவரை கொட்டடி வைரவர் கோயிலடி, நமசிவாயம் வித்தியாலயம் முன்பாக. பிற்பகல் 2 - 3.30 மணிவரை பேதுறுப்பிள்ளை வெதுப்பகம் முன்பாக.

# முருங்கைக்காய் விலை குறைந்தது

யாழ்ப்பாணம், மே 27

தென்மராட்சி பிரதேசச் சந்தைகளில் முருங்கைக்காயின் விலை குறைவடைந்துள்ளது.

கடந்த மாதம் கிலோ 600 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் கடந்த சனிக்கிழமை முதல் கிலோ 120 ரூபாவாக விற்கப்படுகிறது.

முருங்கைக்காயின் விலை குறைவடைந்துள்ளதையடுத்து ஏனைய மரக்கறிகளின் விலைகளும் வீழ்ச்சியடைந்து வருவதாக மரக்கறி உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். (202-207)



யாழ்.பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் யாழ்.நகர் கிழக்கு வலயத்தில் சித்திரைப் புதுவருட விழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் நடைபெற்ற விநோத உடைப் போட்டியில் உதயன் பத்திரிகையை உடையாகத் தயாரித்து அணிந்துள்ள ஒரு சிறுமியையும் கடற்கன்னி வேடம் தரித்த சிறுமியையும் படத்தில் காணலாம்.

# 61ஆவது டிவிஷன் புதிய படையணி இரண்டு பிரிகேட்டுகளுடன் உருவாக்கம்

கொழும்பு, மே 27

இலங்கை இராணுவத்தின் 13 ஆவது டிவிஷனான '61 ஆவது படையணி' உருவாக்கப்பட்டு வருகிறது என்றும், அந்த உருவாக்கத்தில் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் புதிய டிவிஷனின் கீழ் 611 ஆவது பிரிக்கேட், 612 ஆவது பிரிக்கேட் என இரண்டு பிரிக்கேட்டுகள் உள்ளடக்கப்பட இருக்கின்றன.

61 ஆவது டிவிஷனின் பொதுக் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் லலித் டலுகல்ல நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது 51 முதல் 59 வரையிலும் ஒன்பது டிவிஷன்களும், 21,22, 23 ஆவது டிவிஷன்களும் களத்தில் உள்ளன. 61 ஆவது டிவிஷன் படையணி எங்கு நிலை கொள்ளும் என்பது தெரியவரவில்லை.(சி)

# அல்வாய் வடக்கில் கல்வியில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

அல்வாய் வடக்கில் கல்வியில் சாதனை நிகழ்த்திய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஸ்ரீலங்கா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அன்றைய தினம்காலை 8.30 மணிக்கு மாணவர்களின் ஊர்வலம் கிராம அலுவலர் சி. சிவபாலசிங்கம்தலைமையில்நடைபெறும். அரங்க நிகழ்வுகள் முற்பகல் 11 மணிக்கு க. கார்த்திகா தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன், மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா, யாழ். மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி, யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவிக்கப்படவுள்ள மாணவர்களின் விவரம் வருமாறு:-

ஜெ. கிஷோக்குமார், கெ. குலவேந்தினி, செ. சோபினி, இ. ஜெனிபா, இ.வனஜா, ந. தாட்சாயினி, இ. ரணிதா, சி. விஜயபாலன், க. சுமதரன். (202-70)

## வாசகர் திருமுகம்

### கடற்கழிவுகளை மைதானத்தில் போடுவது சரியா?

அராலி மாவத்தை விளையாட்டு மைதானத்தின் தெற்கு எல்லைகளில் வசிப்பவர்கள் கடற்றொழில் செய்துவிட்டு விளையாட்டு மைதானத்தில் வலகளைக் காயவிட்டு, அடித்து உலர்த்துவதுடன் கடற்கழிவுகள் மைதானத்தில் கொட்டுவதால் பல சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன அத்துடன் மைதானத்தின் தென்.மேற்குப் புறத்தில் மாவத்தையின் நல்ல தண்ணீர்க் கிணறு இருக்கிறது. இப் பகுதி மக்கள் அந்தத் தண்ணீரைப் பாவிக்கிறார்கள். கடல் கழிவுகளால் நல்ல தண்ணீர் விரைவில் உவராகமாறும் அறிகுறிகள் தென்படுகிறது.

கடற்கரையிலே மற்றவர்களைப் போல் வலைகளைக் காயப்போடலாம். இத்துடன் மைதானப் பாதைகளிலும் சுற்றாடல்களிலும் போடுவதைத் தவிர்த்தால் மைதானம் சுத்தமாக இருக்கும். கடற்கழிவு நாற்றம் இல்லாமல்போகும். பலவகையில் பொது நன்மைகள் ஏற்படும்.

- மாவத்தை விளையாட்டுக் கழகம்.

### திருநெல்வேலிச் சந்தையில் மலசல கூட அமைப்பு

மக்களுக்குப் பல இடர்பாடுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கும் திருநெல்வேலிச் சந்தை அமைப்பு திருத்தியமைக்கப்பட விருப்பது மகிழச்சி தரும் விடயம். சந்தை அமைப்பில் மலசலகூடம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இது நாள் வரை காட்டப்பட்டு வந்த அக்கறையை விட மேலதிகமாக அக்கறை மலசல கூட அமைப்பில் காட்டப்பட வேண்டியது அவசியம்.

மேலும் மலசலகூடம் மோசமான நிலையில் இருப்பதால் அதன் அமைப்பையும் வசதிகளையும் விட பயன்படுத்தும், பராமரிக்கும் முறைதான் முக்கிய காரணமாகிறது. பயன்படுத்தும் முறை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தலாம், பொறுப்போடு செயற்படும்படி மக்களுக்கு அறிவுறுத்தலாம் என்று பொதுவாகச் சொல்லப்படுவதுண்டு. ஆனால் இவை பயன்தரா. இதுவரை நாம் கடைப்பிடிக்காத சில நவீன முறைகளையும் கையாள்வது அவசியம்.

சந்தை என்ற காரணத்தால் பயனாளிகளின் தொகையை விட பயன்படும் காலப்பகுதி முக்கிய கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். பயன்படுத்துவோரின் வழமையான செயற்பாடுகளும் கவனிக்கப்பட வேண்டும். முக்கியமான சில ஏற்பாடுகள்.

1.போதியளவு எண்ணிக்கையில் மலசல கூடங்களை அமைத்தல். (சிலவற்றின் பயன்பாடு நிறுத்தப்பட வேண்டியும் வரும் என்பதைக் கருத்திற் கொண்டு)

2. சாதாரணமாகச் செய்யப்படும் தண்ணீர் ஏற்பாட்டை விட மேலதிகமாக முக்கிய நேரங்களில் தண்ணீர் தொடர்ச்சியாக ஓடிக் கொண்டிருப்பதற்கும் ஏற்பாடு தேவை.

3. சிறுநீர் கழிப்பதற்கான சாதனங்ளை இருபாலாருக்கும் ஏற்படுத்துதல். (சில வேளை புதிதாகத் தருவிக்கப்பட வேண்டியும் வரும்)

4. ஒழுங்காகப் பயன்படுத்தும் வரை உறுதி செய்தல். (இந்தியாவில் இருக்கும் கட்டணக் கழிப்பறை ஏற்பாட்டை அடிப்படையாக வைத்து ஒழுங்குகளைச் செய்யலாம்.)

எல்லாவற்றிற்கும் மேலாகக் கண்காணிப்பு வேலைகளிலும் மாதத்திற்கொருமுறையாவது மேலதிகாரிகளும் சிறிது நேரத்தைச் செலவிடுவது பெரும் பயனளிக்கும்.

சந்தையின் நலனைப் பேணும் வகையில் ஒரு பொதுமக்களும் சேர்ந்த அமைப்பு செயற்படுவது நன்மையளிக்கும். சம்பந்தப்பட்டவர்களுக்கு இது சமர்ப்பணம்.

கொக்குவில். வை.சந்திரபாலன்.

## உலோகங்களுக்கு பிளாஸ்டிக் பூச்சு பூசுதல்
## (Plastic coating of metals)

*அறிமுகம்:-*

அநேகமான உலோகங்களைத் துருப்பிடிப்பதிலுருந்து பாதுகாக்க மேற்பரப்பு பூச்சு பூசப்படும். பூச்சுப் பூசுதல், மின்பிரி முறையினால் பூச்சுமானம் செய்தல் ஆகியன சாதாரண முறையாகும். பிளாஸ்டிக் பூச்சு பூசுதல் (Plastic Coating) அண்மையில் செய்யப்பட்ட அபிவிருத்தியாகும். பிளாஸ்டிக் பூச்சுப் பூசுவது தோய்த்தெடுத்தல் முறை(dipping) அல்லது விசிறுதல் மூலம் (Spraying) செய்யப்படும். தீ விசிறுதல் மூலம் அல்லது நிலை மின்இயல் மூலம் (Electrostatic spraying) அல்லது தோய்த்தெடுத்தல் மூலம் (dipping) பிளாஸ்டிக் பூசுவதைச் செய்யலாம்.

***மூலப்பொருள்கள் (Rawmaterials):***

அநேகமான பிளாஸ்டிக் பவுடர்கள் (Plastic powders) சந்தையில் இருக்கின்றது. உதாரணமாகப் பொலி எதிலீன் (Polyethylene), பொலிபுறப்பலீன்(Polypropylene), பொலி எமைட் (Polyamide) பொலிவைனயில் குளோறைட்டு (Poly Vinyl Choride-P.V.C) ஆகிய பவுடர்களை உபயோகிக்கலாம். ஒரு கிலோ பிளாஸ்டிக் பவுடர் 10 சதுர மீற்றர்கள் மேற்பரப்பிற்குப் பூசப்போதுமானதாகும்.

### தீ விசிறும் செய்முறை (Flame Spraying Method)

பிளாஸ்டிக் பவுடரை (plastic powder) புறோபேன் (propane) அல்லது அசற்றலின் (acetylene) தீச்சுவாலை விசிறும் கருவியின் (spraygun) உதவியுடன் உலோகத்தின் மேற்பரப்பிற்குப் போடுதல் வேண்டும். அப்போது பிளாஸ்டிக் பவுடர் உருகி உலோகத்தின் மேற்பரப்பில் படரும். பூச்சுப் பூசுவதற்கு முன்னர் ஐதரகுளோறிக் கமிலம் (Hydrochloric acid), உராயும் கடுதாசி (abrasive paper) ஆகியவற்றின் மூலம் உலோகத்தைச் சுத்தம் செய்தல் வேண்டும்.

என்.ஜே.இரத்தினதயா,
உதவி தொழில்நுணுக்க வல்லுனர்,
கைத்தொழில் அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபார நிறுவனங்கள் சந்தையில் நிலைத்து நிற்பதற்கு முக்கிய பங்கு வகிக்கும் வணிகப் புள்ளிவிவரவியல்

புள்ளிவிவரவியலில் துறைரீதியான ஓர் அலகே வணிகப்புள்ளி விவரவியலாகும். ஒவ்வொரு நிறுவனமும் அதன் சொந்தச் சாதனைகளை பின்நோக்கிப் பார்ப்பதற்கும் அதன் நடவடிக்கைகளை கணிப்பதற்கும் எதிர்காலத்தை முன் ஆய்வதற்கும் வணிகப் புள்ளிவிவரங்கள் வாய்ப்பாக இருக்கின்றன. புள்ளிவிவரங்கள் எல்லாத் துறைகளிற்கும் பொதுவானதாகக் காணப்பட்டபோதிலும் துறைவாரியான தொழில்மை அம்சங்களிற்கு ஏற்ப சில விசேட புள்ளி விவர முறைகள் பயன்படுத்தப்பட்டு புள்ளி விவர ஆய்வுகள், தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. போட்டி நிலவுகின்ற சந்தைச் சூழ்நிலைமைகளில் உச்சபட்சமான இலாப உழைப்பினை உறுதிப்படுத்தவும் நீண்டகாலம் சந்தையில் நிலைத்து நிற்கவும் வேண்டிய தேவை ஒவ்வொரு வணி அமைப்புக்களுக்கும் ஏற்பட்டிருக்கின்றது.

அதனால் நிறுவன முகாமையாளர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்கள் அதிசிறந்தவையாக அமையவேண்டுமாயின் தீர்மானத்துக்கான சரியான சான்றுகள், ஆதாரங்கள் அவசியமானவையாகும். தரவுகள், தகவல்களைச் சேகரித்து வைப்பதன் மூலமும் புள்ளிவிவர நுட்ப அணுகுமுறை மூலம் நிச்சயமற்ற எதிர்கால நிலைமைகளிலும் குறைவான ஆபத்துக்களுடன் வணிக நடவடிக்கை தொடர்பான ஓரளவு சரியான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படலாம். எனவேதான் வணிக முகாமையாளர்கள், கணக்கியலாளர்கள் வணிகப் புள்ளிவிவரவியல் பற்றிய தலைமையை விருத்தி செய்துகொள்ளவேண்டியது அவசியமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## வர்த்தக தீபம்

### வணிகப் புள்ளிவிவரங்கள் பயன்படும் சந்தர்ப்பங்கள்

வணிகப் புள்ளிவிவரங்களான வணிகத் துறையின் பல்வேறு தொழிற்பாடுகளிலும் பல்வேறு மட்டங்களிலும் வழிகாட்டியாகப் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்கள் வருமாறு:

*1. வணிகத்துறைப் போக்கு:*

நாடாளவிய ரீதியில் வணிகத்துறையின் பரப்பும் அபிவிருத்தியும் வணிகத் தரவுகள் மூலம் எடுத்துக்காட்டப்படலாம். ஏற்றுமதி, இறக்குமதி வியாபார புள்ளி விவரங்கள் வணிகத்துறையில் சர்வதேச ரீதியான தொடர்புகள் போன்றவற்றினை எடுத்துக்காட்டலாம்.

*2. நிறுவனங்களை ஸ்தாபித்தல்:*

நிறுவனம் ஒன்றினை ஆரம்பிக்கும் போது நிறுவனத்தின் முயற்சியை ஓரிடப்படுத்தும் காரணிகளை இனம் கண்டு பொருத்தமான இடத்தினைத் தெரிவுசெய்தல் வேண்டும். அதாவது இடம், ஊழியர், மூலப் பொருள்கள், போக்குவரத்துச் சந்தை வசதிகள் போன்றன பற்றிய புள்ளிவிவர தரவுகளைச் சேகரித்து, பகுப்பாய்வு செய்து ஒப்பீட்டுச் செலவின் அடிப்படையிலும் இலாபத்தை உச்சப்படுத்தக்கூடிய வகையிலும் செலவீனங்கள், நட்டங்கள் என்பவற்றை இழிவுபடுத்தக்கூடிய வகையிலும் பொருத்தமான இடத்தில் நிறுவனத்தை நிறுவுதல் வேண்டும்.

*3. நிரம்பலும் கேள்வியும் பற்றிய ஆய்வு*

மூலப்பொருள்கள், முடிவுப்பொருள்கள், ஊழியம் தொடர்பான வழங்கல் பற்றிய புள்ளிவிவரத் தரவுகளைச் சேகரித்து பொருத்தமான வழங்குநர்களைத் தீர்மானிக்கவேண்டும். குறிப்பிட்ட பொருள்களுக்கான கேள்வி நிலைமைகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்து நுகர்வோர் விருப்பங்கள் எதிர்கால சந்தை வாய்ப்புகள் போன்றன பற்றியும் பருவகால மாற்றத்திற்கேற்ப கேள்வி மாற்றங்களையும் ஆய்வுசெய்தல் வேண்டும்.

*4. முகாமைத்துவக் கருவி*

வணிக அமைப்புகளில் பிரச்சினை விடுத்தலிற்கும் தீர்மானம் மேற்கொள்ளலிற்குமான முகாமைத்துவத்தின் ஒரு கருவி வணிக புள்ளிவிவரங்கள் ஆகும். தரவுகளைப் பயன்படுத்தி சில விசேட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பின்வரும் சில நுட்பங்கள் வணிக முகாமையினால் பயன்படுத்தப்படுகின்றன. இதனைச் செயற்பாட்டு ஆய்வு அல்லது இயக்க ஆய்வு எனவும் கூறுவர்.

*அ. ஏகபரிமாணத் திட்டமிடல்:*

முகாமைத் தீர்மானங்கள் பொதுவாக வளங்களினை ஒதுக்கீடு செய்வது தொடர்பான பிரச்சினைகளுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றன. என்ன வகையான பொருள்களை எவ்வளவாக உற்பத்தி செய்தல்வேண்டும் என்பதனை தீர்மானிப்பதற்கான ஒரு நுட்பமே ஏகபரிமாணத் திட்டமிடல் முறையாகும். அதாவது மட்டுப்படுத்தப்பட்டுள்ள வளங்களின் பங்கீட்டுடன் இலாபத்தை எவ்வாறு உச்சப்படுத்தலாம் செலவீனத்தை எவ்வாறு இழிவுபடுத்தலாம் போன்றவை தொடர்பான தீர்வுகள் இம்முறையில் காணப்படலாம்.

*ஆ. வலைப்பின்னல் ஆய்வு*

இரண்டாம் உலக யுத்த காலத்தில் அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் விருத்தி செய்யப்பட்ட ஒரு செயற்றிட்டமே வலைப்பின்னல் ஆய்வாகும். செயற்றிட்டம் ஒன்றில் திட்டமிடல் கட்டுப்படுத்தல் வள ஒதுக்கீடுகள் தொடர்பான ஆய்வே வலைப்பின்னல் நுண்ணாய்வு எனப்படுகின்றது. இதனுடன் இணைந்த வகையில் சிறுசிறு வேறுபாடுகளுடன் புதிய நுட்ப முறைகள் நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றன.

*1. செயற்றிட்ட மதிப்பீடும் மீளாய்வு நுட்பமும்:*

இத்திட்டமானது அமெரிக்க கடற்படையால் விருத்தி செய்து அறிமுகப்படுத்தப்பட்டது.

*2. விமர்சன மார்க்க நுண்ணாய்வு முறை*

இம்முறையானது Do pont company யினால் விருத்தி செய்து அறிமுகப்படுத்தப்பட்டது.

திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்நுட்பங்களைப் பயன்படுத்திப் பெறப்படும் முடிவின் அடிப்படையில் முகாமையானது தீர்மானங்களை மேற்கொள்ள முடிகிறது. இந்நுட்பம் செயற்பாட்டு ஆய்வு அல்லது இயக்க ஆய்வின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது.

*5. சந்தை ஆராய்ச்சி:*

சந்தை ஆராய்ச்சி மூலம் பெறப்படும் தரவுகளைக் கொண்டு சந்தையில் நிறுவனத்தின் பங்களிப்புப் பற்றியறிந்து கொள்ள முடியும். அத்துடன் பொருள்களின் தரம், வடிவம், விலை தொடர்பான நுகர்வோர் விருப்பங்கள் பற்றிய தரவுகளைச் சேகரித்து ஆராயமுடியும்.

*6. திட்டமிடலும் கட்டுப்பாடும்:*

உற்பத்தி விற்பனை, கொள்வனவு போன்ற நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும் தரக்கட்டுப்பாடு, இருப்புக் கட்டுப்பாடு, செலவுக் கட்டுப்பாடு போன்றவற்றைச் செவ்வனே மேற்கொள்வதற்கும் வணிகத் தரவுகள் அவசியமாகும்.

*அ.உற்பத்தித் திட்டமிடல்:*

கேள்வியை ஈடுசெய்யக்கூடியவாறு உற்பத்தியை திட்டமிட்டுக்கொள்ளவேண்டும். அதாவது மிகை உற்பத்தியோ அல்லது குறை உற்பத்தியோ ஏற்படாதவாறு உற்பத்தியை திட்டமிடல் வேண்டும்.

*ஆ. விற்பனை திட்டமிடல்:*

விற்பனைப் போக்கின் அடிப்படையில் எதிர்கால விற்பனையை திட்டமிடல்வேண்டும். விற்பனை தொடர்பான வணிகத் தரவுகளைப் பயன்படுத்தி நிறுவனத்தின் விற்பனைப் போக்கினை வெளிக்காட்டமுடியும்.

*இ.தரக்கட்டுப்பாடு:*

உற்பத்திப் பொருள்களின் தரத்தினையும் வணிகப்புள்ளிவிவரவியல் நுட்ப மூலம் உறுதிப்படுத்தலாம். தரக்கட்டுப்பாடானது உற்பத்தி செய்முறையை கட்டுப்படுத்தல் மூலம் அல்லது உற்பத்தியைக் கட்டுப்படுத்தல் மூலம் மேற்கொள்ளப்படலாம்.

*ஈ. இருப்புக் கட்டுப்பாடு:*

வணிகப் புள்ளிவிவரங்கள் மூலம் இருப்புக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளமுடியும். இருப்புகள் மிகையாகவோ குறையாகவோ இல்லாமல் இருப்பதன் மூலம் வீண் விரயம், வீண்செலவு என்பவற்றினைத் தவிர்க்கலாம். இதற்கு உற்பத்தி விற்பனை தொடர்பானதரவுகள் ஆராயப்படவேண்டும்.

*7. கணக்கீடும் கணக்காய்வும்:*

கணக்கீடும் கணக்காய்வும் எண் தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. நிதி, கிரயம் முகாமைக் கணக்கீடுகள் நிறுவனத்தின் செயலாற்றலை வெளிப்படுத்திக் காட்டுபவையாக இருப்பதால் இத்தகைய தரவுகள் கவனமாகப் பதியப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படவேண்டும். மாதிரி எடுப்பு மூலம் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுவதனால் தரவுகள் சரியாக இருப்பதனை உறுதிப்படுத்தவேண்டும்.

*8. ஆளணி முகாமைச் செயற்பாடுகள்:*

ஊழியர் நியமனம், ஊழியர் பயிற்சி, ஊழியர் பதவியுயர்வு, ஊழியர் செயலாற்றல் மதிப்பாய்வு, ஊழியர் சம்பளங்கள், ஊழியர் தகைமைகள் போன்றன தொடர்பாக திட்டமிடல்வேண்டும். இவற்றிற்கு ஆளணி முகாமைத் தரவுகளே மூலாதாரமாக் காணப்படுகின்றன.

*9. பொதுவான செயலாற்றல்:*

வணிகத் தரவுகளைப் பயன்படுத்தி நிறுவனத்தின் செயலாற்றலை மதிப்பிட்டுக்கொள்ளமுடியும். இலாபநட்டப்போக்குகள் செலவீனப் போக்குகள், நிதி நிலைமைப் பராமரிப்புகள் போன்றவற்றின் மூலம் செயலாற்றலை மதிப்பிட்டுக்கொள்ளலாம்.

*10. முன்னாய்வு அல்லது எதிர்வுகூறல்:*

கடந்தகால நிகழ்கால தரவுகளின் அடிப்படையில் எதிர்காலம் பற்றிய எதிர்வுகூறல் மேற்கொள்ளப்படலாம். உற்பத்தி விற்பனவு, கொள்வனவு போன்றன தொடர்பான முன்னாய்வு செய்யப்படமுடியும். அத்துடன் விற்பனை விலை பொருள்களின் கிரயம் போன்றன தொடர்பான நீண்டகால எதிர்வு கூறல்களிற்கு வருமானம் பொருள்களின் பெறுமாணம், தேய்மான வேகம் போன்ற விடயங்கள் அவசியமானவையாகும்.

### வணிகத்துறையுடன் தொடர்புடைய புள்ளிவிவரங்கள்

1. உற்பத்தி தொடர்பான புள்ளிவிவரங்கள்
2. கொள்வனவு விற்பனவு தொடர்பான புள்ளிவிவரங்கள்
3. செலவீனம், வருமானம் தொடர்பான புள்ளிவிவரங்கள்
4. ஆளணித்தொகுதி தொடர்பான புள்ளி விவரங்கள்
5. சந்தை ஆராய்ச்சி, சந்தைப்பங்கு தொடர்பான புள்ளிவிவரங்கள்
6. இலாப/நட்ட நிதி நிலைமை தொடர்பான புள்ளிவிவரங்கள்
7. வியாபார அமைப்புகள் தொடர்பான புள்ளிவிவரங்கள்
8. நிதித் தொழிற்பாடுகள் தொடர்பான புள்ளிவிவரங்கள்
9. வியாபாரச் சேவைகள் தொடர்பான புள்ளிவிவரங்கள்
10. மூலதனச் சந்தை, பங்குச் சந்தை முதலீட்டு வாய்ப்புத் தொடர்பான புள்ளி விவரங்கள்.
11. வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான புள்ளிவிவரங்கள்
12. சென்மதி நிலுவை, வரவு-செலவுத் திட்டம், பணமும் வங்கியும் போன்றன தொடர்பான புள்ளிவிவரங்கள்

### வணிகப் புள்ளிவிவரங்களின் தன்மைகள் அல்லது இயல்புகள்

1. வணிகத்துறையுடன் தொடர்புடைய தரவுகளாக இருத்தல்
2. பணப்பெறுமதியுடனும் அலகுகளுடனும் கூடுதலான தொடர்வுகொண்டிருக்கும்.
3. சிக்கலற்ற தரவுகளாகக் காணப்படல்
4. குறிப்பிட்ட விவரம் தொடர்பான பொருத்தமான தரவாக இருந்தல்
5. பொருளுள்ள தரவுகளாக இருத்தல்

### வணிகப் புள்ளிவிவரவியலின் முக்கியத்துவம்

வணிகப் புள்ளிவிவரவியலின் முக்கியத்துவம் அவற்றின் பயன்பாட்டினாலேயே நிச்சயிக்கப்படுகின்றது.

**த.சிவசூரியகுமார்**

1. நிறுவனத்தின் வரலாற்றுச் சான்றுகளாகப் புள்ளிவிவரங்கள் பயன்படுத்தப்படலாம்.
2. உற்பத்தி விற்பனை பற்றிய போக்குகள் மேற்கொள்ளவேண்டிய மாற்றங்கள் என்பவற்றை அறிதல்.
3. சந்தையில் குறிப்பிட்ட நிறுவனத்தின் சந்தைப்பங்கு யாது கேள்வி வாய்ப்புகள் போன்றன பற்றி அறியமுடிதல்.
4. நிறுவனங்களின் செயலாற்றல், திறமை, திறமையீனம் என்பவற்றைக் கண்டுகொள்ளலாம்.
5. நிறுவனத்தின் பொதுவான நிலைமை, சிறப்பான ஆற்றல்கள் என்பவற்றுடன் போட்டி நிறுவனங்களுடன் ஒப்பிட்டு ஏற்றத்தாழ்வுகளை அறிந்தகொள்ளமுடியும்.
6. நிறுவனத்தின் பலம், பலவீனம் பற்றி அடையாளம் கண்டு பரிகாரம் செய்து கொள்ளலாம்.
7. முகாமைப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் முடிதல்.
8. நிறுவனத்தின் மீது நவீன விஞ்ஞான தொழில்நுட்ப தொழில் நுணுக்க மாற்றங்களின் தாக்கங்களினை அறிந்துகொள்ளல்.
9. திட்டமிடல், கட்டுப்பாடு, மேற்பார்வை செய்தல் போன்ற முகாமைக்கருமகங்களுக்கு அடிப்படையாக இருத்தல்
10. புள்ளிவிவரவியல் முன்னாய்வு நுட்பங்களின் மூலம் எதிர்வுகூறல் மேற்கொள்ளப்படலாம்.

(நன்றி:வரவு)



*தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறைக் கிளையினர் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள அரச, தனியார் நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்களில் ''பென்சன் பிளஸ்'' கணக்குகள் பற்றிய பிரசாரங்களைச் செய்துவருகின்றனர். வங்கி உத்தியோகத்தர்கள் பிரசார நடவடிக்கைகளுக்கு ஆயத்தமானபோது எடுக்கப்பட்ட படம். (218)*



*இலங்கை வங்கி யாழ்.மேற்தரக் கிளையில் புதுவருடக் கொண்டாட்டம் நடைபெற்றபோது முகாமையாளர் ஆர்.விஜயசிங்கம் தலைமையுரை நிகழ்த்துவதையும் [illegible] வெஸ்ரர், ஸ்ரீசுப்பிரமணிய குருக்கள், வடபிராந்திய உதவிப் பொது [illegible]ளர் பி.ஏ.அருமைநாயகம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்






# உதயனின் விசேட ஆசிரியர் குழாமின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் இலகுவழிப் பயிற்சி -7

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் ஒழுங்குமுறையாக எழுதினால் கதை ஒன்று உருவாகும். அவ்வாறு சரியான ஒழுங்கில் உள்ள இலக்கங்களைக்கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

01. 1) அதிபரும் பொலிசாரும் பொருளுக்கு உரியவரும் என்னை மிகவும் பாராட்டினார்கள்.
 2) சிறிது தூரம் சென்றதும் பணப்பை ஒன்று கீழே கிடப்பதைக் கண்டேன்.
 3) அதிபர் அதனைக் காவல் நிலையத்தின் ஊடாக உரியவரிடம் ஒப்படைத்தார்.
 4) நான் அதை எடுத்துச்சென்று அதிபரிடம் கொடுத்தேன்.
 5) நான் துவிச்சக்கர வண்டியில் பாடசாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன்.
 1) 5, 1, 2, 4, 3  2) 5, 2, 4, 3, 1  3) 1, 5, 2, 4, 3

கீழுள்ள வாக்கியங்களில் முதற்சொல்லுக்கு ஏதோவொரு வகையில் தொடர்புடைய இரண்டாவது சொல் போல் மூன்றாவது சொல்லுக்குத் தொடர்புடைய நான்காவது சொல்லைத் தெரிவுசெய்க.


02. ஆடுமேய்ப்பவன் இடையன் என்பதுபோல, தேர்செலுத்துபவன் ( சாரதி, பாகன் )

03. மரங்களின் கூட்டம் தோப்பு என்பதுபோல,மனிதர்களின் கூட்டம் ( சனம், மந்தை, சந்தை )


04. பெருந்துன்பத்துக்கு உள்ளாக்குதல் கழுத்தறுத்தல்போல, துன்பத்தில் உள்ளவரைக் காப்பாற்றுதல் ( கைவிடுதல், கைகொடுத்தல், கைகாட்டுதல் )

05. அக்கம்பக்கம் என்பது இணைமொழிபோல, குடுகுடு என்பது ( அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி, பழமொழி )

கடிகாரம் ஒன்றின் இருவேறு தோற்றங்கள் அருகில் காட்டப்பட்டுள்ளன.




01.




02.

06. முதல் நிலையிலிருந்து இரண்டாவது நிலையை அடைவதற்கு செலவான காலத்தைக் குறிக்கும் விடை எது?
 1) 30 நிமிடங்கள்.  2) 1மணி 30நிமிடங்கள்.
 3) 2மணி 30நிமிடங்கள்.

வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

07. இன்றைக்கு மறுநாள் நாளை என்பதுபோல் இன்றைக்கு முதல்நாள்,
 1) இன்று.  2) நாளை.  3) நேற்று.

08. ஈசான மூலைத்திசைக்கு எதிரானது நிருதிமூலைத்திசை போல அக்கினிமூலைத் திசைக்கு எதிரானது எது?
 1) கிழக்கு.  2) வாயு மூலை.  3) வடக்கு.

09. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கமலா கோயிலுக்குச் செல்வாள். இம்மாதம் 5ஆம் திகதி கமலா கோயிலுக்குச் சென்றாள். இம்மாதத்தில் கமலா கோயிலுக் குச்சென்ற ஏனைய நாட்களுக்குரிய திகதிகள் எவை?
 1) 10, 15, 20  2) 12, 19, 26  3) 15, 22, 29

10. லீப் வருடம் நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை வரும். 1980 ஆம் ஆண்டு லீப் வருடமாயின், அதனைத் தொடர்ந்துவரும் மூன்று லீப் வருடங்களும் எவை?
 1) 84, 88, 92  2) 88, 87, 91  3) 86, 88, 90

11. நான் காலை 9மணிக்கு கோயிலுக்குச் சென்றேன். அப்பொழுது எனது நிழல் என்னைப் பின்தொடர்ந்து வந்தது. நான் சென்ற திசை யாது?
 1) வடக்கு.  2) கிழக்கு.  3) மேற்கு.

12. எனது தம்பி ஒரு படத்தைக் காட்டி ''இப்படத்தில் இருப்பவள் எனது தாயின் தங்கை'' என்று கூறினான். ஆகவே, அப்படத்தில் உள்ளவள் எனக்கு என்ன உறவுமுறை?
 1) சித்தி.  2) மாமி.  3) அக்கா.

13. கமலனுக்கு இப்பொழுது வயது 8வருடங்கள், அவன் தங்கை கமலிக்கு வயது 3 வருடங்கள், இன்னும் எத்தனை வருடங்களுக்குப் பின் கமலியின் வயதின் இரு மடங்குகளாக கமலனின் வயது இருக்கும்?
 1) 2 வருடங்கள்.  2) 4 வருடங்கள்.  3) 1 வருடம்.

14. சதுரவடிவக் காணி ஒன்றின் ஒருபக்கத்தைப் பார்க்கும்போது 6 தூண்கள் காணப்பட்டன. அக்காணியிலுள்ள தூண்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?
 1) 24  2) 20  3) 28

15. முற்பகல் 7.10 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட அகிலன் 10நிமிடங்கள் நடந்துசென்று பஸ்நிலையத்தை அடைந்து, 15 நிமிடங்கள் பஸ்நிலையத்தில் காத்திருந்து, 20 நிமிடங்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்து பாடசாலை ஆரம்பித்து 5 நிமிடங்களின் பின் பாடசா லையை அடைந்தான். அவனது பாடசாலை ஆரம்பித்த நேரம் யாது?
 1) மு.ப 7.10  2) மு.ப 7.50  3) மு.ப 7.55

16. அகிலனின் பாடசாலையில் வகுப்பொன்றில் 35 மாணவர்கள் வீதம் 7 வகுப்புக்களும், 33 மாணவர்கள் வீதம் 3 வகுப்புக்களும் 28 மாணவர்கள் வீதம் 2 வகுப்புக்களும் உள்ளன. அவனின் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?
 1) 400  2) 350  3) 450

17. அஜித் பாடசாலை வாசலில் இருந்து வடக்குத்திசையில் சிறிதுதூரம் சென்று வலதுகைப்பக்கம் திரும்பி, சிறிது தூரம்சென்று மீண்டும் வலதுகைப்பக்கம் திரும்பி, சிறிதுதூரம் சென்று இடதுகைப்பக்கம் திரும்பிச்சென்று அதிபரின் காரியாலயத்தை அடைந்தான். வாசலில் இருந்து அதிபரின் காரியாலயம் அமைந் துள்ள திசை யாது?
 1) வடக்கு.  2) கிழக்கு.  3) தெற்கு.

18. சரஸ்வதி மகாவித்தியாலயம் இம்முறை வலயங்களுக்கிடையிலான கரப்பந் தாட்டப் போட்டியில் வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்கு காரணம் பின் வருவனவற்றுள் எதுவாக இருக்கும்?
 1) சரஸ்வதி மகாவித்தியாலயம் கரப்பந்தாட்டத்தில் அடைந்துள்ள பிரபல்யம்.
 2) விளையாட்டுக்குழு தினமும் பயிற்சியில் ஈடுபட்டமை.
 3) விளையாட்டுச் செயற்பாடுகளில் பெற்றோரின் அக்கறை.

19. விருது கிராமத்தின் மக்களிடையே அடிக்கடி பேதி பரவியது. இந்நோய் பரவுவதற்கு முக்கிய காரணமாக அமைவது,
 1) கிராம மக்களின் கல்வியறிவு குறைபாடு.
 2) வைத்தியசாலை சிறியதாக இருத்தல்.
 3) நீரைச் சுடவைத்துப் பருகும் பழக்கம் இல்லாமை.

20. நாளைய தினம் சூரிய வெய்யில் இல்லாவிட்டால், பின்வருவனவற்றுள் எது நடந்திட அதிக வாய்ப்பு உண்டு?
 1) தொடர்ந்து மின்சார விளக்கு எரிந்துகொண்டிருக்கும்.
 2) தொடர்ந்து இருட்டாக இருக்கும்.
 3) மக்கள் தொடர்ந்து தூங்கிக்கொண்டிருப்பர்.

21. நான்கு கால்விலங்குகள் யாவும் சோறு உண்ண ஆரம்பித்தால், அதன் விளைவாக உடனடியாக நடந்திட வாய்ப்பு உள்ளது பின்வருவனவற்றுள் எது?
 1) மனிதர் அதிகமாக நெல் உற்பத்தி செய்தல்.
 2) நெல் உற்பத்தியில் புதியமுறை கண்டுபிடித்தல்.
 3) அரிசித்தட்டுப்பாடு ஏற்படுதல்.

22. காட்டிலுள்ள மரங்கள் யாவற்றையும் வெட்டி அழித்தால், ஏற்படக்கூடிய மிகப்பிரதான பாதிப்பு பின்வருவனவற்றுள் எது?
 1) வீடுகள் கட்டப்படுவது நின்றுவிடும்.
 2) மழை இல்லாமற்போய் வறட்சி உண்டாகும்.
 3) பறவைகளுக்கு கூடுகட்ட இடம் இல்லாமல்போகும்.

பின்வரும் விவரங்களைக்கொண்டு 23-27 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| 1kg சீனி, 500g தேயிலை | - | ரு. 175.00 |
| 1kg சீனி, 400g பால்மா | - | ரு. 155.00 |
| 1kg சீனி | - | ரு. 035.00 |
| 1kg பிஸ்கட், 500g தேயிலை | - | ரு. 220.00 |

23. 100g தேயிலையின் விலை யாது?
 1) ருபா 35  2) ருபா 28  3) ருபா 12

24. 1200g பால்மாவின் விலை யாது?
 1) ருபா 280  2) ருபா 360  3) ருபா 120

25. 250g பிஸ்கட்டின் விலை யாது?
 1) ருபா 35  2) ருபா 40  3) ருபா 20

26. 2kg சீனியினதும், 250g தேயிலையினதும் விலை யாது?
 1) ருபா 220  2) ருபா 350  3) ருபா 140

27. 0.4kg பால்மாவினதும், 100g பிஸ்கட்டினதும் விலை யாது?
 1) ருபா 178  2) ருபா 158  3) ருபா 128

28. விளிம்புகள் எதனையும் கொண்டிராதது,
 1) கனவுரு.  2) கோளம்.  3) நான்முகி.

29. 1500 இன் 2/5 பகுதியின் பெறுமானம்,
 1) 300  2) 600  3) 900

30. மனிதனின் உடல்வெப்பநிலையை அளவிட பயன்படும் உபகரணம்,
 1) நீரமானி.  2) வெப்பமானி.  3) பாரமானி.

31. பக்டீரியா, பங்கசு, வைரசு என்பன
 1) தாவரங்கள்.  2) நுண்ணங்கிகள்.  3) களைகள்.

32. தாவரங்களில் நடைபெறும் உணவுற்பத்திச் செயற்பாடு,
 1) ஒளித்தொகுப்பு.  2) வித்துமுளைத்தல்.  3) சேமிப்பு.

33. நாளாந்தம் உடலுக்கு தேவையான சக்தியை வழங்குவது,
 1) விற்றமின்.  2) அயடீன்.  3) புரதம்.

34. உடலில் அயடீன் குறைபாட்டினால் ஏற்படும் நோய்,
 1) மாலைக்கண்.  2) கண்டமாலை.  3) என்புருக்கி.

35. நுளம்பினால் பரவும் நோய் அல்லாதது,
 1) டெங்கு.  2) மலேரியா.  3) ஸ்கேவி.

36. மனிதத்தோலினால் தொகுக்கப்படும் விற்றமின்,
 1) A  2) B  3) D

37. நமது வாய்க்குழியில் சமிபாடடைய ஆரம்பிப்பது,
 1) புரதம்.  2) கொழும்பு.  3) காபோவைதரேற்று.

38. 'டி' என்னும் எழுத்தைச் சேர்ப்பதன்மூலம் கருத்துள்ள பெயர்ச்சொல் ஒன்றை ஆக்கக்கூடிய எழுத்து எது?
 1) பா  2) ஒ  3) தா

39. 8, 4, 7, 4, 6, 4, .... என்னும் எண்தொடரில் தொடர்ந்து வரக்கூடிய இரு இலக்கங்களும் எவை?
 1) 5, 3  2) 6, 3  3) 5, 4

40. தம்பி, தங்கை, அண்ணா, அக்கா இவர்களை குறிக்க உகந்த ஒரு சொல் எது?
 1) உறவினர்.  2) குடும்பத்தினர்.  3) நண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணக மலர்வு: 11.10.1956

விண்ணக விரைவு: 27.04.2008



## அமரர் கந்தையா பரமேஸ்வரன் [வரதர்]

[பரமேஸ்வரன் ஸ்ரோர்ஸ், அச்சுவேலி]

நடமாடும் வீடுதனில் நிழற்படம் ஆகிவிட்ட
எமதன்பு அப்பாவே!
இன்றுடன் நீங்கள் மறைந்து ஒருமாதம் ஆனதப்பா
இனி எங்கு காண்போம் உங்கள் அன்பு முகம்
உங்கள் ஆத்மா சாந்திபெற
என்றும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

கடந்த 27.04.2008 அன்று சிவபத்மடைந்த எமது குடும்பத் தலைவர் கந்தையா பர மேஸ்வரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27-05-2008) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளன. இந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகள் கிடைக்கப் பெறாதவர்கள் தயவுசெய்து இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (74467) மனைவி, பிள்ளை, சகோதரர்.

## யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மே27 சிவலிங்கயோக கேந்திரா நிலையத்தினர் நடத்தும் யோகாசன வகுப்பின் புதிய பிரிவுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு வட்டுக்கோட்டை சிந்துபுரம் காந்திஜி சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகும். (202)


**DLF IPL CRICKET OFFER**

ஜூன் 4 வரை மட்டும்
**DISH TV package** ரூபா 9000/=
இருந்து (6 மாத இலவச சந்தாவுடன்)

★ DISH TV இற்குரிய கட்டணங்கள் செலுத்தி ஒரு மணி நேரத்தில் Activate செய்து கொள்ளலாம்.

★ DISH TV ரிசீவருக்குரிய அனைத்து Software களும் மாற்றிக் கொள்ளலாம்

★ மற்றும் கேபிள் TV க்குரிய அனைத்து உதிரிப்பாகங்களும் மலிவான விலையில் கிடைக்கும்.

★ உங்கள் கேபிள் நெட் வேர்க் சம்பந்தமான அனைத்து தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படும்.



மேலதிக விவரங்களுக்கு:
**SATS-TECH ENGINEERS**
இல.182,கே.கே.எஸ்.வீதி, குளப்பிட்டி சேச் அருகில், கொக்குவில்.
(74309) Phone :- 222 5908 / 0777 710785


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 ★ 05 ★ 1927



மறைவு 29 ★ 05 ★ 2005

## அமரர் கணபதிப்பிள்ளை செல்லத்துரை

திதி: 27.05.2008

ஆண்டுகள் மூன்று சென்றதையா எம்மை விட்டு நீர் பிரிந்து
ஆயிரம் உறவுகள் எம்மருகில் இருந்தாலும்
அவை அனைத்தும் உங்கள் அன்புக்கு ஈடாகுமா!

கந்தரோடை,
சுன்னாகம் மேற்கு. (74421) மனைவி,
பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில் 14 . 08 . 1933

விண்ணில் 27 . 04 . 2008

## திருமதி நடராஜா இராசலட்சுமி

அம்மா என்று அழைக்க யாரிந்தப் பூமியிலே அம்மா!
நீங்கள் மானிடங்கள் போற்றும் மானிடப் பிறவி அம்மா!
அலறுகிறோம் அம்மா! அம்மா! என்று நாங்கள்! அம்மா!
ஆற்றாமல் மெய்யெல்லாம் சோருகின்றோம் அம்மா!

உன் ஒரு மாத இழப்பு ஒருயுகம் போல் இருக்கிறது அம்மா!
திடீரென எம்மைவிட்டு ஆண்டவனிடம் போனாயோ அம்மா!
பெற்ற பிள்ளைகளை முத்தென வளர்த்தாய் அம்மா!
கற்றிட வைத்து எம்மை கண்ணெனக் காத்தாய் அம்மா!

ஞாயிறு அதிகாலைதனில் இடியென விழுந்தது உன் பிரிவு அம்மா!
உங்கள் ஆத்மா கையிலையை நோக்கி விரைந்தது அம்மா!
நீங்கள் எம்முடன் பல்லாண்டு இருப்பீர்கள் என்று ஏமாந்தோம் அம்மா!
இடைநடுவில் எங்களை விட்டு எங்கு சென்றீர்கள்! அம்மா

இப்பூவுலகில் இனி எங்கே காண்போம் உன் வதனமதை அம்மா!
இப்பூமியதில் நாங்கள் வாழும்வரை அம்மா!
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலாது அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவின்போது எம் துயரத்தில் பங்கெடுத்தவர்களுக்கும், இறுதிக்கிரியையின்போது எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (27.05.2008) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதான வீதி, கூடத்து அம்மன் கோயிலடி, சங்கானை. (74469) குடும்பத்தினர்.

# 21ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் அருளம்பலம் முத்துராஜா

(முன்னாள் உப தபாலதிபர், தொண்டைமானாறு)

தோற்றம் 03★04★1930 மறைவு 27★05★1987

அன்புடன் எம்முடன் வாழ்ந்த
வாழ்வினை இருபத்தோராண்டுகள்
ஓடினாலும் இருபது நாள்கள்
சென்றதைப்போல் தெரிகின்றதே.

காளிகோயிலடி,
கெருடாவில்,
தொண்டைமானாறு. (74475)

என்றும் உங்கள்
நினைவில் ஏங்கும்:
உம் குடும்பத்தினர்.

# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 ★ 02 ★ 1950



மறைவு 27 ★ 05 ★ 1983


## திருமதி தவராணி சிங்கராசா

கூட்டில் ஒரு பறவை தன்
கூரிய அலகால் உணவெடுத்து
ஊட்டித் தன் குஞ்சுகளை வளர்க்கிறது
ஆபத்து வந்ததும் சிறகுகளை
அகல விரித்துக் காக்கிறது கண்டேன்
இருபத்தைந்து வருடங்கள்
பின்நோக்கிப் பார்க்கிறேன்
சிறகு முளைக்காத குஞ்சுகளாய் நாம்
தாய்ப்பறவை நீதான்
அன்பு கிடைத்தது அரவணைப்பு இருந்தது
பாசம் பெருகி பிரிவு விரிந்தது
ஒருநாள் நீ பறந்தாய் எல்லாமே பறந்தன
கலங்காமல் காலெடுத்து வைத்தோம்
குன்றுகள் தகர்த்து குழி நிரப்பி நடக்கின்றோம்
ஆனால் நிரம்ப மறுக்கிறது
நீ இருந்த இடம் மட்டும்.

70/6, பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம். (74416)

பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்களின் கல்விக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பழைய இறுவட்டுக்களால் செய்யப்பட்ட கடற்கன்னி உருவம், பாவிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி அட்டைகள் ('கிற்காட்') மூலம் செய்யப்பட்ட வீடு, கரப்பந்தாட்ட அணியாகத் தயாரிக்கப்பட்ட பொம்மைகள் ஆகியவற்றை முதல் 3 படங்களிலும் காணலாம். கண்காட்சியைப் பார்வையிடும் மாணவர்களை 4 ஆவது படத்தில் காணலாம். *(படங்கள்: நேசன்)*

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மாணவர்கள் தமது பின்புலத்தைக் கருத்தில் கொள்ளாது கற்றலில் கவனம் எடுத்து முன்னேற முயற்சிக்க வேண்டும்

## வேலணை பிரதேச செயலர் அறிவுரை

வேலணை,மே.27

மாணவர்கள் தமது பின்புலத்தைக் கருத்தில் கொள்ளாது, அதாவது தாம் ஏழைகள், பின்தங்கியவர்கள் என்ற எண்ணம் கொள்ளாது கற்றலில் கவனம் எடுத்து முன்னேற வேண்டும்.

இவ்வாறு வேலணைப் பிரதேச செயலர் மு. நந்தகோபாலன் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கற்றல் சாதனங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட அறிவுரையை வழங்கினார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சூழலில் இன்றைய சூழ்நிலையும், வருமானம் குறைந்தவர்களின் நிலையைக் கருதும்போது இக்கற்றல் சாதன உதவி பெரும் வரப்பிரசாதமாகும். இந்த உதவியைப் புரியும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் பாராட்டுக்குரியது.

ஏழைகளும், பின்தங்கிய மாணவரும் தமது நிலைமையைக் கருதிக் கொள்ளாது ஊக்கத்துடன் கல்வியில் ஈடுபட வேண்டும். அப்துல் கலாம் அவர்கள் ஓர் ஏழ்மையான படகோட்டியின் மகனாகப் பிறந்து தலை சிறந்த விஞ்ஞானியாகவும், இந்திய நாட்டின் ஜனாதிபதியாகவும் உயர்ந்தார். அவர் கஷ்டத்துடன் கல்விகற்று இந் நிலையை அடைந்தார். அது போல எமது பிரதேச மாணவர்களும் தமது சூழ்நிலைக் கஷ்டங்களை கருதாது கல்வியில் அதிக அக்கறை எடுத்து முன்னேற வேண்டும்.



மாணவர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற முன்னோர் வாக்கை மனதிற்கொண்டு தமது தாய்,தந்தை, ஆசிரியர் என்போரைத் தெய்வமாக மதித்து, அவர்கள் சொல்லைக் கேட்டு நடந்தால் கல்வியில் முன்னேற முடியும். இன்று கிடைக்கும் இக் கற்றல் சாதன உதவியையும் நல்ல முறையில் பயன்படுத்தி எமது பிரதேச மாணவர்கள் கல்வியில் முதலிடம் பெற இறைவனைப் பிராத்திக்கின்றேன்- என்றார்.

நிகழ்வில் தீவக வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேஸ்வரனும் உரையாற்றினார்.

(202-267)

## நிவாரண விநியோகம்

நவாலி, மே 27

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளுக்குச் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் மா, சீனி, அரிசி போன்ற உலர் உணவுப் பொருள்கள் மேலதிகமாக வழங்கப்பட்டுவருகின்றது.

மேலும் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு நிவாரணமும் இக் கிளைகளில் தற்போது வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-100)

## சமய சந்நிதிகளில்

யாழப்பாணம்,மே 27

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (202)

* * *

சாவகச்சேரி, மே 27

தென்மராட்சி கிழக்கு சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள இந்த உற்சவத்திற்கு ஆலயத்தில் கூடும் அடியார்களின் நன்மை கருதி விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுகாதாரம், குடிநீர் போன்ற சேவைகளைச் சாவகச்சேரி பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. ஆலயச் சூழலில் உணவுக் கடைகள் மற்றும் ஏனைய விடயங்களை சுகாதாரப் பரிசோதகர் மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நாள்களில் அடியார்களின் போக்குவரத்து வசதி கருதி பருத்தித்துறை டிப்போவினால் இந்த பாதைகளூடாக மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தவும் இத் தினங்களில் கொடிகாமம்- கறுக்காய்ப் பகுதிக்கு உள்ளிட்ட வீதியில் மேலதிகமாக ஒரு சேவையை நடத்தவும் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (202-231)

* * *

வடமராட்சி,மே27

வடமராட்சி வல்லிபுர குருக்கட்டு சித்தி விநாயகர் கோயில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் அருளுரை இடம்பெறும்.

(202-236)

## விசேட அ.அட்டை விண்ணப்பப் படிவங்கள் மீள் பரிசீலனை செய்யப்படுகின்றன

யாழ்ப்பாணம்,மே27

யாழ். மாவட்டத்தில் விசேட அடையாள அட்டைக்காக விண்ணப்பித்தவர்களின் படிவங்கள் மீள் பரிசீலனை செய்யப்படுகின்றன.

மாவட்டத்தில் உள்ள 10 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இராணுவ அடையாள அட்டை பெற்றிருத்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு 6 மாதங்களுக்கு முன்னர் கிராமசேவகரின் சிபார்சுடன் விண்ணப்பங்களை மக்கள் சமர்ப்பித்திருந்தனர்.

இந்த விண்ணப்பப் படிவங்களே தற்போது இராணுவத்தால் மீள்பரிசீலனை செய்யப்படுகின்றன.

இன்னும் ஓரிரு மாதங்களில் இராணுவ அடையாள அட்டை சகலருக்கும் வழங்கப்படும் என மீள் பரிசீலனை மேற்கொள்ளும் இராணுவத்தினர் தெரிவிப்பதாகக் கூறப்படுகின்றது.

(202-25)

## நெல்லியடி ம.ம.வித்தியாலய நவோதய வாரப் போட்டி முடிவுகள்

கரவெட்டி, மே27

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய நவோதயா வாரத்தை முன்னிட்டு வித்தியாலய மாணவர்கள் மத்தியில் பொது அறிவுப் போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டிகளில் புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய கலாசார மண்டபத்தில் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

வித்தியாலய அதிபர் செ.சேதுராஜாவின் அனுசரணையுடன் நடைபெற்ற நிகழ்வில் பகுதித்தலைவர் ஐ.செல்வராசா வெற்றியீட்டிய மாணவ மாணவியர்களுக்குச் சான்றிதழ்கள், பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

பரிசு பெற்ற மாணவர்கள் விவரம் வருமாறு:

தரம் 6, புஸ்பலிங்கம் அனோஜா, தரம் 7, யோகலிங்கம் அஜந்தன், தரம் 8, மேரி யோசப்தாசன் ரோஜிதா, தரம் 9, செல்வராஜா சஞ்சிகா, தரம் 10 முருகானந்தம் அபிராம், தரம் 11 ஜெயவரதராஜா உமை சுதன், தரம் 12 உருத்திர சிவகணேசமூர்த்தி பிரணவதர்சன், தங்கவேலாயுதம் கம்சாயினி, தரம் 13 சண்முகலிங்கம் சித்திரா. (202-70)

## குறிகாட்டுவான் துறைமுக மலசலகூடங்கள் உரிய பராமரிப்பின்றி உள்ளன என விசனம்

நல்லூர், மே27

புங்குடுதீவு - குறிகாட்டுவான் துறைமுகத்திற்கு அண்மையில் உள்ள மலசலகூடமும் கடைத் தொகுதியை அண்டியுள்ள மலசலகூடங்களும் பொதுமக்களின் பாவனைக்கு உகந்தனவாக இல்லை என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இம் மலசலகூடங்களைப் பராமரிப்பதில் - துப்புரவு செய்வதில் உரியவர்கள் கவனம் எடுப்பதில்லை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

குறிப்பிட்ட மலசலகூடங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படாததால் குறிகாட்டுவான் துறைமுகம் ஊடாகப் போக்குவரத்துச் செய்யும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

எதிர்வரும் 4 ஆம் திகதி நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய உற்சவம் ஆரம்பமாகின்றது. இதனைஒட்டி இத்துறைமுகம் ஊடாக ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் பயணம் செய்வர்.

இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறிப்பிட்ட மலசலகூடங்களைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-111)

## ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கான மனித மேம்பாட்டுக் கல்விப் போதனைப் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 27

காலஞ்சென்ற மருத்துவப் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரத்தின் (நந்தி) ஆன்மீக, இலக்கிய, மற்றும் மருத்துவத் துறைசார் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வரும் பேராசிரியர் நந்தி அறக்கட்டளை, பேராசிரியர் முன்னின்று செயற்படுத்திய சத்தியசாயி நிறுவன மனித மேம்பாட்டு செயற்திட்டத்தில் அடங்கும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கற்பித்தல் தொடர்பான பயிற்சி நெறியை முன்னெடுத்து நடத்தி வருகின்றது.

மேற்படி பயிற்சி நெறியின் ஓர் அங்கமாக, யாழ் கல்வி வலயத்துடன் இணைந்து, ஆரம்பப் பாடசாலை முதன்மை நிலை ஆசிரியர்கள் 40 பேருக்கான களப்பயிற்சி நெறியொன்று கடந்த 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் யாழ். கல்வி வலய முகாமைத்துவ நிலையத்தில் நடத்தப்பட்டது.

சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்விப் பிரிவின் முன்னாள் தலைவர் வே.சேனாதிராஜாவின் தலைமையில் நடைபெற்ற குறிப்பிட்ட பயிற்சி நெறி நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி. இராசலிங்கம் மற்றும் உதவிக்கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

**மனித மேம்பாட்டுக்கல்வி அவசியம்**

பிரதிக்கல்விப் பணிப்பாளர் ரி.இராசலிங்கம் தமது உரையில்:

சிறுவர்களுக்கு மனித மேம்பாடு தொடர்பான அறிவு புகட்டப்பட வேண்டியது இன்றைய கால கட்டத்தில் அத்தியாவசியமானதொன்றாக அமைந்துள்ளது. வன்முறைக் கலாசாரம் தீவிரம் பெற்றுள்ள இன்றைய கால கட்டத்தில், சிறுவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதால், இத்தகைய மனித மேம்பாட்டுக் கல்வித்திட்டங்கள் அவசியமாகியுள்ளன - என்றார்.

ஒழுக்கம், விழுமியங்களைப் பேணுதல், வினைத்திறன் என்பவை கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்குவதே இன்றைய கல்வியின் நோக்கமாக அமைகிறது. அவற்றை உரிய முறையில் மாணவர்களை உள்வாங்க வைப்பதன் மூலம், மாணவர்களை இயல்திறன் உள்ளவர்களாக ஆக்க இயலும். அதற்கு இத்தகைய மனித மேம்பாட்டுக் கல்வித்திட்டங்கள் பேருதவியாக அமைகின்றன - என்று உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் தமது உரையில் தெரிவித்தார்.

**மொழியைப் பாதுகாக்க உதவும்**

நிகழ்வுக்குத் தலைமை வகித்த வே. சேனாதிராஜா தமது உரையில் தெரவித்ததாவது:-

சிறு வயதில் மாணவர்கள் மத்தியில் நேரிய சிந்தனைகளை உருவாக்குவதன் மூலம் அவர்களை எதிர்கால நற்பிரஜைகளாக உருவாக்க முடியும். இந்த மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டத்தில் முக்கியமாக மொழியைப் பாதுகாத்தல், பயன்படுத்தல், வளர்த்தல் ஆகிய குறிக்கோள்கள் அடங்கியுள்ளதுடன் இனத்தின் கலாசாரம், பாரம்பரிய நற்பழக்க வழக்கங்கள் என்பவற்றைப் பேணுதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கிய கற்பித்தல் நடைமுறையும் உள்வாங்கப்பட்டுள்ளது - என்றார். (அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவு அலைகள்



**திருமேனி மரியசீலன்**

தோற்றம் 05.05.1967

மறைவு 27.04.2008

கடந்த 27.04.2008 ஞாயிற்றுக்கிழமை காலமான எமது மரியசீலனின் 31ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (27.05.2008) செவ்வாய்க்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (74458) **திருமேனி குடும்பம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 09 ★ 04 ★ 1930



விண்ணில் 27 ★ 04 ★ 2008

**திருமதி அன்னப்பிள்ளை மயில்வாகனம்**

*[இளைப்பாறிய ஆசிரியை, யா/வீரசிங்கம் ம.வி]*

27.04.2008 இறைபதம் எய்திய எமது குலவிளக்கு திருமதி அன்னப்பிள்ளை மயில்வாகனம் அவர்களின் மறைவைக் கேட்டு இல்லம் நாடி வந்து ஆறுதலை பகிர்ந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், வேறு பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்ப சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (27.05.2008) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்நது நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சிற்றம்பலம் வீதி,*
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (74471) **பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## தவறிவிட்டது

பிலிப் மரியதாசன் பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி எனும் விலாசமுடைய தேசிய அ.அட்டை (502043900V) வல்லைக்கும், நெல்லியடிக்கும் இடையில் 21.05.2008 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும்.
(சி/552981)

## தவறிவிட்டது

மார்க்கண்டு மனோன்மணி என்பவருடைய தே.அ.அட்டை (585373400V) வங்கிப் புத்தகம் (கொமர்ஷல்) என்பன 25.04.2008 நல்லூருக்கும் யாழ்.நகருக்கும் இடையில் மினிபஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

*தொடர்பு : 411, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*
*077 9749747* (74481)

## கர்ப்பிணிகள் கிளினிக் முள்ளிக்கு இடமாற்றம்

நவாலி, மே27

ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்தில் இயங்கி வந்த கர்ப்பிணிகள் கிளினிக் சிகிச்சைப் பிரிவு முள்ளிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 3 வருடங்களாக இங்கு இயங்கி வந்த இக்கிளினிக்குக்கு கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை நாளடைவில் மிகக் குறைந்து காணப்பட்டது.

இதனால் இக்கிளினிக் சிகிச்சைப் பிரிவு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியினால் முள்ளியிலுள்ள கர்ப்பிணிகள் கிளினிக்குடன் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-100)

## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மே27

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதி தூக்கி வீசப்பட்டதில் மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் இராச வீதியில் இடம்பெற்றது.

மட்டுவிலைச் சேர்ந்த வீ.பத்மநாதன் (வயது 63) என்பவர் தலை மற்றும் கை ஆகியவற்றில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(202-207)

## சொற்பொழிவாளர் கௌரவிப்பு

யாழ்.திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் ஆலய மஹோற்சவ காலத்தில் தொடர் சொற்பொழிவாற்றிய இளம் சொற்பொழிவாளர் சிதம்பரநாதன் சசீவன் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி ஆலய பரிபாலன சபையினரும் காளிகோவிலடி சனசமூக நிலையத்தினரும் இணைந்து சஜீவனுக்கு கடந்த புதன்கிழமை பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவித்தனர்.

(202)

## யாழ்.மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் சமாதான நீதிவான்களாகப் பிரமாணம்

யாழ்.மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் சமாதான நீதிபதிகளாக இன்று செவ்வாய்க்கிழமை சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளனர்.

யாழ்.மத்தியஸ்தர் சபையில் உள்ள 26 உறுப்பினர்களுள் 11 அங்கத்தவர்கள் யாழ். நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட உள்ளனர். ஏனையவர்கள் அடுத்தநாள் புதன்கிழமை உறுதியுரை செய்து கொள்ளவுள்ளனர்.

நாட்டில் உள்ள சகல மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கும் சமாதான நீதவான் பதவி வழங்கப்பட்டுள்ளன. தவிசாளர்களுக்கு அகில இலங்கை நீதவான் பதவியும் ஏனையவர்களுக்கு மாவட்டப் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(202-302)

## நெஞ்சகலா நினைவலைகள்

**22ஆம் ஆண்டு** | **முதலாம் ஆண்டு**



அமரர்
**இராமசாமி வேலாயுதர்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர், முன்னாள் கிராமசபைத் தலைவர் - இருபாலை)



திருமதி
**சிவபாக்கியம் வேலாயுதர்**

| | | |
|---|---|---|
| 04.04.1917 | தோற்றம் | 14.07.1926 |
| 27.07.1986 | மறைவு | 07.06.2007 |
| ஷஷ்டி 23.07.2008 | திதி | ஸப்தமி 27.05.2008 |

அன்னை, பிதா, மூத்தோர், ஆசிரியர், தெய்வம்
என்று நீதி சொல்லும் எங்கள் அப்பா - தெய்வம்
பத்து மாதம் எமைச் சுமந்து பெற்றெடுத்த அம்மா
சொத்தாய் எமை என்றும் காக்கும் எங்கள் அம்மா - தெய்வம்.

*பிள்ளைகள்* - Dr.V.சூரியகுமாரன் (U.K), V.சொர்ணலிங்கம் (நில அளவையாளர்), V.இராஜசூரியர் A' (U.K), M.சாந்தகுமாரி (புத்தளம்)

*மருமக்கள்* - Dr.S.சாந்தினி (U.K), S.இந்துமதி, En.[illegible] (மாகாண பணிப்பாளர் வடக்கு) பேரன் S.காண்டீபன் மற்றும் பேரப்பிள்ளைகள்.

"சாந்தி பவன்", ஞானபாஸ்கரோதய சங்க வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அழைப்பும்

தோற்றம் 10 ★ 03 ★ 1934



மறைவு 27 ★ 04 ★ 2008

கடந்த 27.04.2008 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த மாம்பிராய் வீதி K.K.S. இல் வசித்து வந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு

**அமரர் ஆறுமுகம் திருநாவுக்கரசு**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 27.05.2008 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்,

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

கோட்டைக்காடு,
மல்லாகம். **மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.** (74485)

## கண்ணீர்ப் பூக்கள்



எமது ஆலய நிர்மாணப் பணியில் ஆரம்ப காலம் தொடக்கம் பெரும் பங்காற்றியவரும் ஆலயப் பொருளாளராக நீண்ட காலம் தொண்டாற்றியவருமான

**பொன்னையா பத்மநாதன்**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா ஸ்ரீ சாயி துர்க்காதேவியின் பாதத்தில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில். **தலைவர், செயலாளர், ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்** (74482)

## 6ஆம் ஆண்டு நினைவுகள்

தோற்றம் 18 ★ 07 ★ 1961



மறைவு 20 ★ 05 ★ 2002


**அமரர் இரத்தினம் பாஸ்கரன்**

*திதி: 27.05.2008*

அன்பின் உறைவிடமே! பாசத்தின் பிறப்பிடமே!
எம் குடும்பத்தின் குல விளக்கே!
உம் இனிய வதனமும் நினைவுகளும்
எம்மை விட்டு என்றும் நீங்காதய்யா

*சாந்தமஹால்,*
*அண்ணாசிலையடி,*
*கரணவாய்.* (74409) **மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நெஞ்சை விட்டகலா நினைவுகளும்



அமரர்
**கந்தையா பரமேஸ்வரன்**
(பரமேஸ்வரன் ஸ்ரோஸ், அச்சுவேலி)

தோற்றம்
11 ★ 10 ★ 1956

மறைவு
27 ★ 04 ★ 2008

*பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்*
*குடும்ப ஒளி விளக்காய் மிளிர்ந்த மாமாவே!*
*உம் பிரிவுத் துயர் எம்மை இன்னும் பிரிந்திடவில்லை*
*வரதா என்று அழைக்க பெரும் பாக்கியம் செய்தோம்*
*நீர் அழிந்தாலும் உங்கள் நினைவுகள் அழிவதில்லை*
*உங்கள் ஆத்மா நித்திய சாந்தியடைய*
*எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (74453) **தெய்வேந்திரன் துவாரகன்**

[illegible]
நாவாந்துறைப் படிப்பகம் [illegible]
மாநகர சபை, யாழ்ப்பாணம்



உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# ஏட்டுச் சுரைக்காயாகும் சட்டக் கட்டமைப்புகள்

ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது. இது நமக்கு நன்கு தெரிந்ததுதான்.

இலங்கையில் இப்போது பெரும் சர்ச்சைக்குரியதாகி இருக்கும் மனித உரிமைகள் விவகாரத்திலும் இதுவே உண்மை நிலைமை என்பதைத் தெளிவாகவும் தீர்க்கமாகவும் இலங்கை அரசுக்கு உணர்த்தியிருக்கின்றது அமெரிக்கா.

ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்கள் தொடர்பான அமெரிக்காவின் பிரதி உதவிச் செயலாளர் எரிக்கா பார்க்ஸ் ரகில்ஸ் இலங்கை அரசுக்கு இதனைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

மூன்று நாள் விஜயமாக இலங்கை வந்திருந்த எரிக்கா அம்மையார் இங்கு, அரசுத் தரப்பின் உயர் தலைவர்களையும் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசியபின்னர் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே மேற்படி விவரத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

"இலங்கையில் மனித உரிமைகளைப் பேணுவதற்குத் தேவையான கட்டமைப்புகள் இருக்கலாம். ஆனால் அவை நடைமுறையில் செயல்திறன் உள்ளவையாகப் பணியாற்றுகின்றனவா என்பதே கேள்வி. இத்தகைய சட்டக் கட்டமைப்புகள்உள்ளன என இலங்கை கூறுவது உண்மையானாலும் நடைமுறையில் கடத்தல்கள், காணாமற்போகச் செய்தல் போன்ற மோசமான மனித உரிமை மீறல்கள் தொடராமல் தடுத்து நிறுத்த அரசு விரைந்து ஏதேனும் செய்தாக வேண்டும். உண்மையில் மனித உரிமைகள் மீறப்படாமல் பேணப்படுவதற்காக வெறும் சட்டங்கள் எழுத்தில் இருந்து பயனில்லை. செயல்ரீதியில் அவ்வாறு மீறப்படாமல் இருப்பதை உறுதி செய்வதே முக்கியம்."

"ஆகவே மனித உரிமைகள் பாதுகாக்கப்படல் என்பது சட்டத்தில் - எழுத்தில் - இருப்பதைவிட செயலில் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதே அவசியமானது. அதை இலங்கை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். ஆள்கடத்தல்கள், காணாமற் போகச்செய்தல் போன்றவற்றைத் தடுத்து நிறுத்த அரசு காத்திரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்." - என்றும் அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

இலங்கையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்படும் நிலைமை உருவாகியிருப்பது தொடர்பான உண்மையான - அடிப்படையான - விவகாரத்தை அமெரிக்கா அடையாளம் கண்டு சுட்டிக்காட்டுகின்றது என்பதையே எரிக்கா அம்மையாரின் கருத்துப் பிரதிபலிக்கின்றது.

மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தித் தடுக்கவும், மனித உரிமைகளைப் பேணி நிலைநிறுத்தவும் தேவையான அடிப்படைச் சட்டங்கள், ஒழுங்கு விதிகள் இந்த நாட்டில் உள்ளன.

ஆனால், அவற்றை முழு அளவில் நடைமுறைப் படுத்தி, செயற்படுத்துவதற்கான திடசங்கற்பமோ, விருப்பமோ, அதற்கான ஈடுபாடோ, உடன்பாடோ அந்தச் சட்ட அமுலாக்கத்தை வலியுறுத்தி நிலைநிறுத்த வேண்டிய பொறுப்புடைய அரசுத் தலைமையிடம் இல்லவே இல்லை.

அது மாத்திரமல்ல. அந்தச் சட்டக் கட்டமைப்பு ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தும் ஈடுபாடு இல்லை என்பதை விட, அந்தச் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி, மனித உரிமைகளுடன் விளையாடித் தனது கைவரிசையைக் காட்டும் சட்ட முரண் போக்கிலேயே ஆட்சித் தலைமை ஊறிக் கிடக்கின்றது. அதன் விளைவாகவே ஆட்கடத்தல்கள், காணாமற் போகச் செய்தல்கள் போன்ற மோசமான மனித உரிமை மீறல்கள், வகைதொகையின்றி - எல்லை மீறி - 'அரச பயங்கரவாதமாக' இங்கு தொடர்ந்தும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

எங்கேனும் ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலைப் புலிகள் நடத்தினால், அந்தத் தற்கொலைக் குண்டுதாரியின் பாவனையில் இருந்த கைத் தொலைபேசியின் சேதமடைந்த 'சிம்'அட்டையின் ஒரு சிறிய துண்டுப் பகுதியை மட்டும் வைத்துக்கொண்டு, அத்தாக்குதலாளியின் பூர்வீகத்திலிருந்து நதிமூலம், ரிஷிமூலம் எனத் தாக்குதலுக்குத் திட்டமிட்டவர் வரை அனைத்தையும் துப்பறிந்து, புலனாய்வு செய்து, உளவு பார்த்துக் கண்டுபிடித்துவிடும் இலங்கைப் பாதுகாப்புத் தரப்புக்கு -

தலைநகர் கொழும்பில் சந்திக்குச் சந்தி இருக்கும் சோதனைத் தடைகள், திடீர் வழிமறிப்பு சோதனை நிலையங்கள் என்பவற்றையெல்லாம் தாண்டி வெற்றிகரமாக வெள்ளைவானில் மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல்களையோ, அவற்றை ஒட்டி இடம்பெறும் கப்ப அற வீடுகளுக்கான தொலைபேசி இலக்கங்கள் குறித்த விவரங்கள் வழங்கப்பட்டும் அவற்றின் சூத்திரதாரிகளையோ கண்டுபிடிக்கவே முடிவதில்லை.

நிமலராஜன், நடேசன், சுகிர்தராஜன் போன்ற ஊடகவியலாளர்களின் படுகொலைச் சூத்திரதாரிகளையோ-

'உதயன்' அலுவலகத்துக்குள் புகுந்து வெறியாட்டம் நடத்தியோரையோ -

அல்லது 'சுடர் ஒளி' அலுவலகம் மீது கிரனேட் தாக்குதல்களை நடத்தியோரையோ -

ஊடகவியலாளர்கள் குருபரன், கீத் நொயர் போன்றோரைக் கடத்தியோரையோ -

அல்லது 'ரூபவாஹினி' ஊழியர்களை அச்சுறுத்தி அவ்வப்போது தாக்கி வருபவர்களின் பின்னணியில் இயங்கும் சூத்திரதாரிகளையோ -

இந்தப் பாதுகாப்புத் தரப்பினரால் கண்டுபிடிக்கவோ அடையாளம் காணவோ முடிவதில்லை.

இத்தகைய புலனாய்வு - பாதுகாப்பு - கட்டமைப்புகள் மனித உரிமைகளைப் பேணும் விவகாரத்தில் வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான். அவை நடைமுறைக்கு உதவா.

# தேர்தலின்போது இளம்பெண்கள் கடத்தப்பட்டமை புதுவிதமான ஜனநாயகம் மலர்வதன் அறிகுறியா?

## இரவில் அச்சத்துடன் வாழும் கிழக்கு மாகாண மக்கள்

மார்ச் 3 ஆம் திகதி அதிகாலை 12.20 மணி. ஆயுதம் தரித்த ஆறு நபர்கள் அந்த வீட்டுக்குள் நுழைந்தார்கள். கதவைத் திறந்த லோகேஸ்வரனி டம் "புஷ்பராணி எங்கே?" என்று கேட்டார்கள். அவர்களைப் பார்க்கவே உடல் உறைந்து விடும்போல் இருந்தது லோகேஸ்வரனுக்கு. அந்த வீட்டில் அவரும் அவருடைய சகோதரி புஸ்பராணியும் மட்டுமே இருந்தனர். புஸ்பராணி ஜி.சீ.ஈ. பரீட்சைக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். அவர்களின் ஏனைய சகோதரங்களையும் பெற்றோரையும்சுனாமிகாவுகொண்டு விட்டிருந்தது.

குண்டர்கள் புஸ்பராணியின் கால், கைகளை கட்டி பலவந்தமாக வெள்ளை வானில் ஏற்றினார்கள். "தன்னைக் காப்பாற்றும்படி அவள் கதறி அழுதாள். "என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை." என்று கூறினார் லோகேஸ்வரன்.

அதேதினம் மாவட்டத்தின் இன்னொரு பகுதியில் யோகநாதன் அயோஸ்தா என்பவர் அவரது அறையிலிருந்து ஆயுதம் தரித்த ஐந்து குண்டர்களால் கடத்திக் கொண்டு போகப்பட்டார். அவரும் சோதனைக்காகப் படித்துக் கொண்டிருந்தவர். அவரது தாயின் வாயில் துணியைக் கட்டி நிலத்தில் வீழ்த்திவிட்டு வெள்ளை வானில் கடத்திச் சென்றுள்ளனர். இந்த இரண்டு சம்பவங்களின் போதும் கடத்தல்காரர்கள் அப்பெண்களின் பெயரைச் சொல்லியே அழைத்திருந்தார்கள்.

மூன்றாவது பெண் மட்டக்களப்பு அழகுசாதன நிலையமொன்றில் பணி புரிந்தவர். மார்ச் 9 ஆம் திகதி பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்த ஒரு பகுதியிலிருந்து அவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இது பற்றிய மேலதிக விவரங்களைக் குடும்பத்தினர் மறுத்துவிட்டார்கள். சம்பந்தப்பட்டவர்களால் மேலும் ஆபத்து ஏற்படலாம் என்ற பயத்தில் .

### தேர்தல் நடந்த அன்று

கிழக்கிலங்கை மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்ற அன்றைய தினம் இரண்டு இளம் பெண்கள் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதாகவும் கல்முனையில் இன்னொருவர் கடத்தப்பட்டதாகவும் இலங்கை சமாதான சபை ஞாயிறு பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டிருந்தது. காடையர்கள் வெள்ளைவானில் வந்து தமது பிள்ளைகள் மீது குற்றம் புரிந்ததாகக் குடும்பத்தினர் கூறியுள்ளனர். இப்பெண்களின் தாயார் பொலிசில் முறைப்பாடு செய்யச் சென்றபொழுது அதிகாரிகள் பலரும் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கூறி முறைப்பாட்டை எடுக்காமல் பொலிஸார் திருப்பி அனுப்பியுள்ளனர். அதே இரவு காடையர் திரும்பிவந்து மூத்த பெண்ணைக் கொண்டு சென்றுள்ளனர். அதிலிருந்து அப் பெண் காணாமல் போயுள்ளார். முறைப்பாட்டைப் பொலிஸார் ஏற்றுக்கொள்ள மறுத்திருப்பதானது தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ளும் நடைமுறை அரசின்மீது குற்றச்சாட்டைத் திருப்புவதாக உள்ளது என்பதைக் காட்டுகின்றது.

வெள்ளைவானில் வந்து இளம் பெண்கள் கடத்தப்படும் சம்பவங்கள் மட்டக்களப்பை உலுக்கிக் கொண்டிருக்கும் அதேவேளை, அங்குள்ள பெற்றார் இரவில் நித்திரை கொள்வதில்லையென்று கூறிகிறார்கள். தங்கள் பெண்பிள்ளைகளும் கடத்தப்பட்டு விடக்கூடும் என்று அஞ்சுகிறார்கள் அவர்கள். பெண்பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதையே நிறுத்திவிட்டதாகச் சில பெற்றோர் கூறினார்கள். தம் வீடுகளின் முன் பகுதிக்கும் கூட அவர்களைச் செல்ல அனுமதிப்பதில்லை.

**த மோனிங் லீடர் பத்திரிகையில் 21.05.2008 பதிப்பில் வெளியான கட்டுரையின் ஒரு பகுதி**

### காரணம் தெரியவில்லை

பெண்பிள்ளைகள் கடத்தப்படுவதற்கான காரணம் தங்களுக்குத் தெரியவில்லையென்று மனித உரிமை ஆணையம் கூறியது. ஆனால் இந்த விடயம் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. கடத்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் அங்கலாய்ப்பில் இருக்க அதிகாரிகள் மௌனம் சாதிக்கிறார்கள்.

இது தனிப்பட்ட கோபதாபமன்று, ஆள் சேர்க்கும் நடவடிக்கையுமல்ல என்பது எமக்கு உறுதியாகத் தெரியும். இளம் பெண்களை இவர்கள் ஏன் கடத்துகிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முயன்றுவருகிறோம் என்று மனித உரிமை ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிழக்கில் பிள்ளையான் அமைப்பைத் தவிர ஆயுதங்களுடன் வீதிகளில் திரிவதற்கு வேறு ஏதும் குழுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனவா! இல்லை. அப்படியானால் தம் பெண்பிள்ளைகளை வீட்டில் விட்டுவிட்டு எந்தத் தமிழ்த் தாயாவது வாக்களிக்க வெளியில் செல்வார் என்று எதிர்பார்க்க முடியுமா!

தமிழ்ப் பெண்களுக்குக் கற்புத்தான் உலகில் பெரிய சொத்து. தன் உடலை அர்ப்பணிப்பதைவிடத் தன் உயிரையே அவள் விட்டுவிடவும் தயங்காள்.

மட்டக்களப்பில் தமிழ் வாக்காளர்கள் பெரும்பாலானவர்கள் வாக்களிக்கச் செல்லாமல் விட்டதற்கு இதுவும் ஒரு காரணம். இதனால் அரசாங்கத்தின் நிலைப்பாடு தோல்வியுற்று முதலமைச்சர் பதவிக்கான அதிக வாக்குகளை முஸ்லிம்களால் பெற்றுக் கொள்ள முடிந்தது. இது இவ்வாறு இருக்கத் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் ஒரு போதும்பாலியல்வல்லுறவு தொடர்பான குற்றச்சாட்டுகளுக்குள்ளானதில்லை.

### இதுவா ஜனநாயகம்?

இந்த மாதிரியான ஜனநாயகத்தைத் தானா கிழக்கு மாகாண சபையிடமிருந்து நாம் அனுபவிக்கப்போகிறோம்? பிள்ளையான் கொழும்பில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டிருந்த அதேவேளை அவருடைய ஆள்கள் மட்டக்களப்பில் ஹிஸ்புல்லாவின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஜனநாயக வெற்றியைக் கொண்டு வருவதற்கான நல்ல முறையாகும் இது. பிள்ளையானை ஆதரிக்கும் மிக முக்கிய பிரமுகர்கள், முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் ஜனநாயகவாதியாக மாற்றப்பட்டதானது இந்த நாட்டில் இடம்பெற்றுள்ள மிக நல்லதொரு காரியம் என்று இப்போதும் புகழ்ந்து பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போதைய தேர்தல் முறையானது அரசியல் அறிவாற்றல், கண்ணியம் அல்லது கிராமசபை அனுபவம் கூட இல்லாத பல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கியுள்ளது. அவர்கள் தங்களைப் பற்றிப் பெரிதாக நினைத்துக் கொண்டு செயற்பட்டதானது வீண்விரயமாய்ப் போனது.. ஹக்கீம் மீது முஸ்லிம் முதல்வர் உருவாவதைத் தடுக்கிறார் என்று குற்றஞ்சாட்டிய ஹிஸ்புல்லா இப்போது வேறு ஒருவர் மீது குற்றம் சாட்டுகிறார். (ப)

# இணையத்தளங்களைக் குழப்பும் வேலையில் ஈடுபடவேயில்லை என்கின்றது அரசுத் தரப்பு

கொழும்பு,மே 27

இலங்கையிலிருந்து செயற்படும் செய்தி இணையத்தளங்களை கண்காணித்து அவற்றை செயலிழக்கச் செய்வதற்காக அரசு விசேட பிரிவொன்றை ஏற்படுத்தியுள்ளது என்ற குற்றச்சாட்டை பாதுகாப்பு அமைச்சு திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு மீது இவ்வாறான குற்றச்சாட்டைச் சுமத்தி வெளியிடப்பட்ட அறிக்கையை, சுதந்திர ஊடக இயக்கமும்'லங்கா டிசெண்ட்' இணையத்தளமும் வாபஸ் பெற வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகள் வாபஸ் பெறப்படாவிட்டால் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் எனத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

பாதுகாப்பு அமைச்சுக்கு எதிராக கடும் குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் சுதந்திர ஊடக இயக்கத்தின் அறிக்கையொன்று குறித்து எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

'லங்கா டிசெண்ட்' இணைய செய்தித் தளத்தில் வெளியாகிய செய்தியை அடிப்படையாக வைத்தும் - அதன் ஆசிரியரால் எழுதப்பட்ட கடிதத்தைச் சுட்டிக்காட்டியும் -

இணையத்தளங்களைக் கண்காணிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு தனியான பிரிவொன்றை ஏற்படுத்தியுள்ளது என்ற 'லங்கா டிசெண்ட்' டின் பொய்யான குற்றச்சாட்டை சுதந்திர ஊடக இயக்கம் தானும் வெளியிட்டிருந்தது.

இணையத் தளங்களை எவ்வாறு செயலிழக்கச்செய்வது என்பது குறித்து பரீட்சார்த்த முயற்சிகளையோ அல்லது ஆய்வுகளையோ மேற்கொள்ளவேயில்லை என பாதுகாப்பு அமைச்சு உறுதியாகத் தெரிவிக்கின்றது.

இதேபோன்று சுதந்திர ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்தோ அல்லது இலங்கையின் வேறு பகுதிகளிலிருந்தோ,வேறு நாடுகளிலிருந்தோ இணையத்தளங்களைக் குழப்புவதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் இதற்காக எவரும் பணியில் அமர்த்தப்படவுமில்லை

'லங்கா டிசெண்ட்' தெரிவித்துள்ள சில கருத்துகள் விவாதத்திற்குரியவை என சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ள போதிலும் , பாதுகாப்பு அமைச்சிடம் இந்த விடயம் குறித்து ஆராயாமல், பிழையான குற்றச்சாட்டைத் தனது அறிக்கை மூலம் ஊடகங்களுக்கு சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்டமை கவலைக்குரியது

இதேபோன்று பத்திரிகையாளர்களின் முக்கிய கடமையான ஆராய்ந்து உறுதிப்படுத்தலை மேற்கொள்ளாமல், ஊடகங்களும் இதற்கு பரந்துபட்டமுக்கியத்துவம் அளித்தமை கவலைக்குரியது.

'லங்கா டிசெண்ட்' டின் பிழையான ஆரம்ப அறிக்கையும் சுதந்திர ஊடக அமைப்பின் அறிக்கை மூலம் உள்ளூரிலும் வெளியூரிலும் கிடைத்த பிரசாரங்களும், இவ்வாறான அறிக்கைகள் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன என்ற கவலையை ஏற்படுத்தியுள்ளன - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 15 | 28.05.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | அட்டமி |
| | பி.ப. 03.23வரை |
| நட்சத்திரம் : | சதயம் |
| | பி.ப. 04.27வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

## வீரமாகாளி அம்மன் தேர்த்திருவிழாப் படம்

நேற்றைய உதயனின் 9 ஆம் பக்கத்தில் வெளியான நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழாப் படங்களின் தகவல் குறிப்பில், என்.ராஜதேவன் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அது தவறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்கும்

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிகளை முடக்கும் நோக்கத்துடன் பிரசார உத்தி?

### பாதுகாப்பு இரகசியங்கள் கசிகின்றன எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 27

இலங்கையில் கடந்த சில வருடங்களில் இடம்பெற்ற முக்கிய சில மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்துவரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பணிகளை இரத்துச் செய்யும் நோக்கத்துடன் அந்த ஆணைக்குழுவிற்கு எதிராக சேறுபூசும் ஊடகப்பிரசாரமொன்று அரசால் ஆரம்பிக்கப்பிட்டுள்ளதாக இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விசாரணை ஆணைக்குழுவிற்கு மாத்திரம் தெரிவிக்கப்பட்டிருந்த இரகசிய பாதுகாப்பு விடயங்கள் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மூலமாக வெளியுலகிற்குத் தெரியவந்துள்ளன என 'திவ யின' வின் ஞாயிறு வார இதழ் பரபரப்புத் தகவல் வெளியிட்டுள்ளமையைக் குறிப்பிட்ட இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இந்த ஆணைக்குழு வெளிநாடுகளிலிருந்து நிதியை பெற்றதைத் தொடர்ந்து ஆணைக்குழுவின் நம்பகத்தன்மை குறித்து கேள்வியெழுந்துள்ளதாக 'லங்கா தீப' வின் ஞாயிறு இதழ் தெரிவித்துள்ளமையும் -

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ இந்த ஆணைக்குழுவை கலைத்துவிடுமாறு கோரிக்கை விடுத்ததுள்ளமையும் - சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புத் தொடர்பான சில இரகசிய விடயங்கள் இலங்கையிலுள்ள சில வெளிநாட்டு தூதுவர்களால் வெளியுலகிற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன என மூத்த சட்டத்தரணிகளான் கோமின் தயாசிறி ,எஸ். எல். குணசேகர ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

மூதூர் படுகொலை குறித்து ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்டிருந்த சில விடயங்கள் அமெரிக்கா,கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்களால் வெளியுலகத்திற்குத் தெரிய வந்துள்ளன எனக் குற்றம் சாட்டியுள்ள அவர்கள் ஜனாதிபதியை இது குறித்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் கோரியுள்ளனர்.

இந்தச் சட்டத்தரணிகள் இருவரும் மேற்படி ஆணைக்குழு விசாரணைகளின்போது அரசுதுருப்புகளினதும், படையினரதும் நலன்களைக் கவனிப்பதற்காக அங்கு ஆஜராகி வருகின்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இவ்வாறான செயல்களால் இலங்கையின் பாதுகாப்பு மற்றும் இறைமைக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தபட்டுள்ளன என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவில் இடம்பெற்றுள்ளவர்களில் 90 வீதமானவர்கள் அரச சார்பற்ற தரப்பைச் சேர்ந்தவர்கள் என கோமின் தயாசிறி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவை சேர்ந்த சில உறுப்பினர்கள் மேற்குலகத் தூதுவர்களுடன் இரகசிய பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ள அவர் இந்தச் சந்திப்பை தாம் இரகசியமாகப் படம்பிடித்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஆணைக்குழுவிற்கு நிதியுதவி கோரப்பட்டது. அரசின் நிதியுதவி ஆணைக்ககுழுவிற்கு வழங்கப்படும் அதேவேளை வெளிநாடுகளிடமிருந்தும் நிதியுதவியை அது கோருவது அதன் பக்கச்சார்பின்மை குறித்து கடும் கேள்விகளை எழுப்பியுள்ளது என்றும் கோமின் தயாசிறி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்க்குழுவை சேர்ந்த அனைவரும் இதில் ஈடபடவில்லையாயினும் சில அரசுசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் மாத்திரம் இதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச நாட்டிற்கு எதிராக செயற்படும் சக்திகளுடன் இந்த ஆணைக்குழு கைகோர்த்துள்ளதால் அதனைக் கலைத்துவிடுமாறு கோரியுள்ளார். (சி)

## மீள் எழுச்சித் திட்ட அறிமுக விழா

கெருடாவில் மே.27

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் மீள் எழுச்சித் திட்ட அறிமுக விழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. காலை 9.30 மணிக்கு துறையாமூலை கிராமத்தில் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும் தொடர்ந்து கெருடாவில் கிழக்கு சீலாப்புலம் கிராமத்தில் கெருடாவில் இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் அறிமுக விழாக்கள் நடை பெறவுள்ளது. (202)

## வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 27

சங்கானை சிலம்புப்புளியடி ஞான வைரவர் ஆலய வருடாந்தத் திருவிழாவின் கடைசி விழா சங்கானை இந்து இளைஞர் மன்றத்தின் அனுசரணையுடன் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (202)

## இந்தியாவுடன் நல்லுறவு பேண கிலானி விருப்பம்

இஸ்லாமாபாத், மே 27

இந்தியாவுடன் உள்ள நல்லுறவில் முன்னேற்றம் ஏற்படுத்துவேன் என்று பாகிஸ்தான் பிரதமர் கிலானி உறுதி கூறியுள்ளார்.

காஷ்மீர் பிரச்சினை உட்பட எல்லாப் பிரச்சினைகளும் விரைவில் தீர்க்கப்பட்டால்தான், அமைதியின் பயனை இரு நாடுகளும் அடையமுடியும். பாகிஸ்தானில் ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசு, இந்தியாவுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளும் - என்று இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் ஷாஹித் மாலிக்கிடம், கிலானி கூறியுள்ளார்.

மேலும் இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

மோதலைச் சமாளிக்கும் நிலையில் இருந்து மோதலைத் தீர்க்கும் நிலைக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் மாறவேண்டும். அதனால் இப்பகுதியில் அமைதி ஏற்பட்டு இரு நாடுகளுக்கும் பலன் கிடைக்கும் - என்றார் கிலானி.

பாகிஸ்தானில் சிறையில் இருக்கும் இந்தியர்களைப பார்த்துப் பேச, அங்குள்ள இந்தியத் தூதரை அனுமதிக்கப் பாகிஸ்தான் ஒப்புக் கொண்டுள்ளது. அதேபோல இந்தியச் சிறையில் இருக்கும் பாகிஸ்தான் நாட்டவர்களைச் சந்தித்துப் பேச இந்தியாவில் இருக்கும் பாகிஸ்தான் தூதருக்கு அனுமதி தர இந்தியா ஒப்புக் கொண்டது. வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி பாகிஸ்தானில் பேச்சு நடத்தியபோது, இது தொடர்பாக ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. முக்கிய பிரச்சினைகளில் இரு நாடுகளுக்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடுகளும் இந்தப் பேச்சின்போது குறைந்தன என் கூறப்படுகிறது.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
வல்லிபுரம் இராசம்மா

தோற்றம்
14.02.1914

மறைவு
07.06.2007

அன்பதனைச் சொரிந்து அருகிலிருந்து
ஆதரித்த எங்கள் அன்புத் தாயே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
சுன்னாகம் கிழக்கு ஞானவைரவரை
வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

கந்தையா வீதி,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(74491)

குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி பாலசரஸ்வதி இராஜேஸ்வரன் UK



புலோலி வடக்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ESSEX U.Kயை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பாலசரஸ்வதி இராஜேஸ்வரன் நேற்று (25.08.2008) ஞாயிற்றுக் கிழமை U.K இல் காலமானார்.

அன்னார் திரு செ. இராஜேஸ்வரனின் (UK) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கிருஸ்ணர்-செல்லபாக்கிய தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா - அன்னம்மா தம்பதியரின் மருமகளும், நகுலாம்பிகை, அருச்சுனலிங்கம், நவரத்தினம், துரைராசா, செங்கமலர், பாலேந்திரன் (Deputy Principal Vada Hindu Girls College PPD) இராமச்சந்திரன் (Accountant UK) ஆகியோரின் சகோதரியும், யாழினி (ENVIRONMENTALIST.UK) Dr.கண்ணன் (UK) நிமலன்(Ch. Accountant.UK) ஆகியோரின் பாசமிகு தாயும் பிரகாஷ் (Lloyds Bank.UK) கதரீன்(NURSE .UK) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற அருச்சுனலிங்கம், துரைராசா, பாலேந்திரன் (Research Officer Agriculture Thirunelvely) Dr.பானுமதி (UK) காலஞ்சென்ற விஜயரத்தினம், சிவராசா, ஆனந்தன் மற்றும் யோகரத்தினம் (UK) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (31.05.2008) சனிக்கிழமை U.K இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
செல்லையா இராஜேஸ்வரன்- கணவன்
No. 39, LIMES AVENUE
CHIGWELL, ESSEX . UK.
Tell. 0044-208-5008280

தாய்- பாக்கியம்
சகோதரிகள்
459, MAIN STREET,
PULOLY EAST,
POINT PEDRO.
021-2264226


## புகைப்பட கண்காட்சி

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை முதல் கலைப்பீட புது மண்டபத்தில் இடம் பெற்றுவரும் பனையிடைவெளி எனும் புகைப்படக் கண்காட்சியினை பொது மக்கள் பாடச்ாலை மாணவர்கள் எனப் பெரும் தொகையானோர் பார்வையிட்டு வருகின்றனர்.

இக் கண்காட்சியின் இறுதி நாள் இன்றாகும். இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கண்காட்சி இடம்பெறும் என சமூகவியல் சமூகத்தினர் தெரிவித்தனர்.

## ஆசிரியர்களுக்கு சம்பளம்

யாழ்.கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்புப் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களுக்கான மே மாத சம்பளம் அவர்களின் வங்கிக் கணக்கின் ஊடாகவே வழங்கப்பட வுள்ளன.

எனவே, குறிப்பிட்ட ஆசிரியர்கள் தமது வங்கிக் கணக்கிலக்கங்களைச் சமர்ப்பித்து சம்பளத்தைப்பெற்றுக் கொள்ளலாம் என யாழ். வல [illegible]


## வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்
## பாடசாலை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2008

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் இக்ராட் (ICTAD) தரம் M9, M8, M7 ம் அதற்கு மேற்பட்ட தரப் பகுதிச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழே தரப்பட்ட அட்டவணைப்படி தொ.இல.1 தொடக்கம் 5 வரையுள்ள கேள்விகளிற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களும் விண்ணப்பிக்கலாம். கீழ் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கணக்கில் வைப்புச் செய்து அல்லது வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 27.05.2008 முதல் 05.06.2008 நண்பகல் 12 மணிவரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 06.06.2008 மு.ப 10 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 06.06.2008 மு.ப 10.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்).
4. கேள்வியினை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
5. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் தமது இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை, பாடசாலைகள் வேலைகள் பொறியிலாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் அவர்களிடம் சமர்ப்பித்து சிபார்சுக் கடிதத்தினை பெறுதல் வேண்டும்.
6. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பமும், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதோரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார் மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும்.
7. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (Vat) 15% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்வரி (Vat) 15% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும். எனினும் இவ் நிபந்தனையும் மீளளிக்கப்படும் வைப்புப்பணம், மீளளிக்கப்படாத வைப்புப் பணம் என்பனவும் பாடசாலைஅபிவிருத்திச் சங்கத்திற்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
8. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 05 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| தொ.இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|---|
| 1 | யா/அராலி இந்துக் கல்லூரி வகுப்பறைக் கட்டடத் திருத்தம் | 2500.00 | 500.00 | M9 |
| 2 | யா/ஏழாலை சைவ மகாஜனாக் கல்லூரி பாடசாலைக் கட்டட நிர்மாணம் -தொடர்வேலை | 4300.00 | 500.00 | M9 |
| 3 | யா/மானிப்பாய் பெண்கள் கல்லூரி இருமாடி வகுப்பறைக் கட்டடத் திருத்தம் | 10,000.00 | 500.00 | M9 |
| 4 | யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை இருமாடி வகுப்பறைக் கட்டடத் திருத்தம் | 10,000.00 | 500.00 | M9 |
| 5 | யா/தாவடி இ.த.க.பா. இருமாடி வகுப்பறைக் கட்டடத் திருத்தம் | 10,000.00 | 500.00 | M9 |
| 6 | யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி. செயற்பாட்டறை நிர்மாணம் 40' X 25' | 19,000.00 | 750.00 | M8 |
| 7 | யா/சண்டிலிப்பாய் வடக்கு த.க.பா. பாடசாலைக் கட்டட நிர்மாணம் 80' X 20' | 19,500.00 | 750.00 | M8 |
| 8 | யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி. இருமாடி வகுப்பறைக் கட்டட க.பொ.த. (சா/த) விஞ்ஞான ஆய்வுகூடம் நிர்மாணம் (கீழ்த்தளம்) 40' X 25 | 26,500.00 | 750.00 | M7 |

ப.விக்னேஸ்வரன், வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மான்செஸ்ரரில் சுழல் ஜாலம்!

## வெட்ரோறியும் பனிஷரும் தலா 6 விக்கெட்டுகளை அள்ளினர்




மான்செஸ்ரர், மே 27

மான்செஸ்ரரில் நடைபெற்றுவரும் இங்கிலாந்து - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இரு அணிகளினதும சுழல் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகப் பிரகாசித்து வருகின்றார்கள்.

நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் பெற்ற 381 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடிய இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 202 ஓட்டங்களுக்குள் சுருண்டது. நியூஸிலாந்தின் சுழல் நட்சத்திரம் வெட்ரோறி 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். தொடர்ந்து தனது இரண்டாம் இன்னிங்ஸைத் தொடக்கிய நியூஸிலாந்து அணி, மொன்றி பனிஷரின் சுழல் தாக்குதலில் நிலைகுலைந்து 114 ஓட்டங்களுக்குள் சுருண்டு படுத்தது.

இதன்படி 294 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடும் இங்கிலாந்து அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 76 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான 3ஆம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸைத் தொடர்ந்தது. 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 159 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்தது. அணி மேலதிகமாக ஓர் ஓட்டத்தை மட்டும் சேர்த்திருந்த நிலையில் கெவின் பீற்றர்ஸன் 26 ஓட்டங்களுடன் வெட்ரோறியின் சுழலில் வெளியேறினார். அடுத்த ஒபிரைனின் வேகத்தில் இயன் பெல் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

அடுத்துக் களம்புகுந்தவர்களான அணித் தலைவர் கொலிங்வூட் 2 ஓட்டங்களுடனும், ரிம் அம்புரோஸ் 3 ஓட்டங்களுடனும் வெட்ரோறியின் பந்துவீச்சில் பவிலியன் திரும்பினர். இறுதிக்கட்டத்தில் ஓரளவு சிறப்பாக ஆடிய ஸ்ருவேட் பிராட் 30 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இங்கிலாந்து அணி 83.3 ஓவர்களில் 202 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. நியூஸிலாந்தின் பந்துவீச்சில் டானியல் வெட்ரோறி 66 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். ஒபிரைன் 3 விக்கெட்டுகளையும், கைல் மில்ஸ் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

179 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணியை பனிஷரின் சுழல் புரட்டியெடுத்தது. இவரது பந்துவீச்சில் ஜிம்மி கௌவ் (29), ஹமிஸ் மார்ஷல் (28), றோஸ் ரெய்லர் (15), மக்கியூலம் (0), டானியல் வெட்ரோறி (4), கைல் மில்ஸ் (8) ஆகியோர் அடுத்தடுத்து விக்கெட்டுகளைப் பறிகொடுத்தனர்.

இறுதியில் நியூஸிலாந்து அணி தனது இரண்டாம் இன்னிங்ஸில் 41.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பனிஷர் 37 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளையும், சைட்பொற்றம் 2 விக்கெட்டுகளையும், அன்டர்ஸன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

தொடர்ந்து 294 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி ஆரம்ப வீரரான அலஸ்ரியர் குக்கை 28 ஓட்டங்களுடன் வெட்ரோறியின் சுழலில் இழந்தது.

நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் ஆட்டம் முடிவடையும் போது இங்கிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 76 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அன்ட்ரூ ஸ்ரோரஸ் 27 ஓட்டங்களுடனும், மைக்கல் வோகன் 12 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்னும் இரண்டு நாள் ஆட்டம் மீதமுள்ள நிலையில் இங்கிலாந்தின் வெற்றிக்கு 9 விக்கெட்டுகள் கைவசமிருக்க 218 ஓட்டங்கள் தேவையாகவுள்ளன. நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடைபெறவிருந்தது.

# மேற்கிந்தியத் தீவுகளுக்கு இலக்கு 287

## 2ஆம் இன்னிங்ஸில் ஆஸி. அணி 167 ஓட்டங்களுக்குள் சுருண்டது

கிங்ஸ்ரன், மே 27

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஜமேக்கா கிங்ஸ்ரனில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு 287 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் தனது இரண்டாம் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 431 ஓட்டங்களையும், மேற்கிந்தியத் தீவுகள் 312 ஓட்டங்களையும் பெற்றிருந்தன. 119 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாம் இன்னிங்ஸைத் தொடக்கிய ஆஸ்திரேலியா அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 17 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்டம் நடைபெற்றது. களத்திலிருந்த மிற்செல் ஜோன்ஸனும், பிரட் ஹொட்ஜும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். அணி மேலதிகமாக ஓர் ஓட்டத்தைச் சேர்த்திருந்த நிலையில் மிற்செல் ஜோன்ஸன் 4 ஓட்டங்களுடன் டரன் பவலின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

தொடர்ந்து இணைந்த சைமண்ட்ஸ் - ஹொட்ஜ் ஜோடி அணியைத் தூக்கி நிறுத்த முயற்சித்தது. இந்த ஜோடி 17 ஓவர்கள் வரை களத்தில் தாக்குப்பிடித்து நின்று தம்மிடையே 52 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இந்நிலையில் பிராவோவின் துல்லியத்தில் ஹொட்ஜ் 27 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார்.

7ஆவது விக்கெட்டில் இணைந்த சைமண்ட்ஸ் - ஹடின் ஜோடியும் ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த ஜோடி 74 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். ஹடின் 23 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது பிராவோவின் பந்துவீச்சில் வெளியேறினார். தொடர்ந்துவந்த வீரர்கள் குறைந்த ஓட்டஎண்ணிக்கையில் விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

ஒரு முனையில் சிறப்பாக ஆடிய சைமண்ட்ஸ் 79 ஓட்டங்களை (9 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள்) பெற்றுக்கொடுத்து பிராவோவிடம் சரணடைந்தார். இறுதியில் ஆஸ்திரேலியா அணி தனது இரண்டாம் இன்னிங்ஸில் 167 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சில் பிராவோ 4 விக்கெட்டுகளையும், டரன் பவல், பிடல் எட்வாட்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் 119 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 287 ஓட்டங்கள் வெற்றிபெறுவதற்குத் தேவைப்பட்டது. இலக்கைக் கலைத்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு நான்காம் நாள் ஆட்டம் முடிவடையும் போது மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சர்வான் 8 ஓட்டங்களுடனும், டெவன் சிமித் 19 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். நேற்றிரவு ஐந்தாம் நாள் ஆட்டம் நடைபெறவிருந்தது.




## கொல்கத்தா, பெங்களூர் வெற்றி

ஹைதராபாத், மே 27

ஐ.பி.எல். தொடரின் லீக் போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி, டெக்கான் சார்ஜர்ஸ் அணியை 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆறுதல் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய டெக்கான் அணி 20 ஓவர்கள் முடிவில் 165 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பெங்களூர் பந்துவீச்சாளர் வினய் குமார் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இலக்கைக் கலைத்த பெங்களூர் அணி 19ஆவது ஓவரில் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மற்றொரு லீக் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு கௌரவ வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார் அணித்தலைவர் சௌரவ் கங்குலி. பரபரப்பான கடைசி ஓவரில் இவர் சிக்ஸர் மழை பொழிய, யுவராஜின் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பரிதாபமாக வீழ்ந்தது.

ஐ.பி.எல். தொடரில் 3ஆவது அரைச்சதம் கடந்த கங்குலி 86 ஓட்டங்களுடன் (6 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள்) ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சு, துடுப்பாட்டத்தில் அசத்திய கொல்கத்தா அணியின் உமர் குல் ஆட்ட நாயகன் விருதைத் தட்டிச் சென்றார்.

# செவ்வாயில் தரையிறங்கியது 'பீனிக்ஸ்' 10 மாத வெற்றிப் பயணத்தின் பின்னர்!



'பீனிக்ஸ்', ஆய்வுக்கலம் செவ்வாய்த் தரையில் தரையிறங்கி நிற்பதை முதல்படத்திலும், ஆய்வுக்கலம் எடுத்தனுப்பிய செவ்வாய்த் தரையின் படமொன்றை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

கலிபோர்னியா, மே 27

நாஸா விண்வெளி ஆய்வு மையத்தால் அனுப்பப்பட்ட 'பீனிக்ஸ்' ஆய்வுக்கலம் சுமார் பத்து மாதங்களின் பின்னர் நேற்று அதிகாலை செவ்வாய்க் கிரகத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.

செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கிய பீனிக்ஸ் விண்கலம் அங்கிருந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த படங்களை அனுப்பியுள்ளது. இவை செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்படாத பிராந்தியங்கள் சம்பந்தப்பட்ட படங்களாகும் என நாஸா ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பூமியிலிருந்து 6 கோடியே 80 லட்சம் கிலோமீற்றர் (42 கோடியே 30 லட்சம் மைல்) தொலைவிலுள்ள செவ்வாய்க்கிரகத்தின் வட துருவத்தை பீனிக்ஸ் ஆய்வுக்கலம் அடைந்து, அங்கு வெற்றிகரமாகத் தரையிறங்கியுள்ளது என்றும் நாஸா குறிப்பிட்டுள்ளது.

செவ்வாய்த் தரையில் பனியாக உறைந்த நீர் மூடப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. அதனை அகழ்வதற்கான 'ரொபோட்டிக்' கரமொன்றும் இந்த ஆய்வுக்கலத்தில் பொருத்தப்பட்டுள்ளது. செவ்வாயில் உயிர் வாழ்வதற்கான சாத்தியமுண்டா? என்பதை அறிவதற்கான ஆய்வை இன்னும் சில நாட்களுக்குள் பீனிக்ஸ் ஆரம்பித்துவிடும் என நாஸா ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பீனிக்ஸ் ஆய்வுக்கலம் வெற்றிகரமாகத் தரையிறங்கியதற்கான சமிக்ஞைகள் கிடைத்ததும், நாஸா விண்வெளி ஆய்வு மையத்தில் பரபரப்புடன் காத்திருந்த விஞ்ஞானிகள் உற்சாகத்தில் குதூகலித்தார்கள்; மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள் என நாஸா ஆய்வு மைய வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

"செவ்வாய்க் கிரகத்தின் வட துருவத்தில் பீனிக்ஸ் துல்லியமாகச் சென்று இறங்கியது. கனவில்தானும் இவ்வளவு துல்லியமாக அது நடந்திருக்காது." - என இத்திட்டத்தின் தலைவர் பேரி கோல்ட்ஸ்டீன் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்போது தான் விண்கலமொன்று செவ்வாய்க் கிரகத்தில் வெற்றிகரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது. இதனால் அனுப்பப்பட்டுள்ள படங்கள் இதுவரை ஆய்வுக்கு உட்படுத்தப்படாத பகுதிகள் சம்பந்தப்பட்டவை என்றும் ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

பீனிக்ஸ் விண்கலம் வெற்றிகரமாகத் தரையிறங்கியிருப்பது நாஸா விஞ்ஞானிகளுக்கு நிம்மதிப் பெருமூச்சை அளித்துள்ளது. ஏனெனில், செவ்வாய்க் கிரகம் விண்கலங்களை விழுங்கிவிடும் என்ற அச்சமும் நிலவி வருகின்றது. இதுவரை பல்வேறு நாடுகள் மேற்கொண்ட முயற்சிகளில் பெரும்பாலானவை தோல்வி கண்டுள்ளன. இது இந்த அச்சத்தை உறுதிப்படுத்தி வந்துள்ளது. இப்போது பீனிக்ஸ் விண்கலம் வெற்றிகரமாகத் தரையிறங்கி, படங்களை அனுப்பி வைத்திருப்பதால் விஞ்ஞானிகள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுள்ளார்கள்.

வெளிநாடுகளில் சுற்றுலாவை மேற்கொள்ளும் ஓர் உல்லாசப் பயணியைப் போல், இந்த பீனிக்ஸ் விண்கலம் முதலில் ஒரு வாரத்துக்கு செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றிப் பார்க்கும் என்றும், 90 நாட்கள் வரை அங்கு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு அங்கிருந்து தகவல்களை அனுப்பும் என்றும் நாஸா தெரிவித்துள்ளது.

## நேபாளத்தில் ஆட்சி அமைக்க மாவோயிஸ்டுகளுக்கு அழைப்பு

காத்மாண்டு, மே 27

நேபாளத்தில் ஆட்சி அமைக்க வருமாறு மாவோயிஸ்டுகளுக்கு பிரதமர் கொய்ராலா அழைப்பு விடுத்தார். இதனால் ஒருமாத காலமாக நீடித்து வந்த இழுபறிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

நேபாளத்தில் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் கடந்த ஏப்ரில் மாதம் நடந்தது. இதில் மாவோயிஸ்டுகள் 575 இடங்களில் 220 -ல் வெற்றி பெற்றனர். இதனால் அவர்களை ஆட்சி அமைக்க வருமாறு பிரதமர் கொய்ராலா அழைப்பு விடுத்தார்.

அவரது அதிகாரபூர்வ இல்லத்தில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் மாவோயிஸ்டு கட்சி கலந்து கொண்டது அப்போது அவர் ஆட்சி அமைக்குமாறு அழைப்பு விடுத்தார்.




## கொலம்பியப் பூகம்பம்; பலி எண்ணிக்கை 11 ஆனது

கொலம்பியாவில் சனிக்கிழமை இரவு தாக்கிய பூகம்பத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது என்று செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

மத்திய கொலம்பியாவில் இந்த பூகம்பத்தில் சிக்கி மேலும் 54 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். 500க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன வென செஞ்சிலுவைச் சங்கக் கொலம்பிய இயக்குநர்வோல்ட் கோட் கூறியுள்ளார்.

காரில் பயணித்துக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் இப்பூகம்பத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர். மேலும் 4 ஆயிரம் பேருக்கு சொற்ப காயங்கள் ஏற்பட்டுள்ளன. மத்திய கொலம்பியாவையும் கிழக்கு கொலம்பியாவையும் இணைக்கும் [illegible] இந்த பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

# லெபனானிய புதிய ஜனாதிபதியாக இராணுவத் தலைவர் பதவியேற்பு

பெய்ரூத், மே 27

லெபனானிய இராணுவத் தலைவர் ஜெனரல் மிஷேல் சுலைமான், அந்நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார். மேற்குலக ஆதரவுடனான அரசுக்கும், ஹிஸ்புல்லா தலைமையிலான எதிர்க்கட்சிக்குழுவுக்கு மிடையிலான ஓர் உடன்பாட்டை அடுத்து இங்கு தேர்தல் நடத்தப்பட்டது.

இத்தேர்தலில் ஜெனரல் மிஷேல் சுலைமான் பெரும்பான்மை வாக்குளால் வெற்றி பெற்றார். லெபானில் உள்நாட்டு போர் மூளும் அபாயம் நிலவியது. கடந்த நவம்பர் முதல் ஓர் அதிபர் இல்லா திரு தமையால் பிரச்சினைகள் தலை தூக்கிவந்தன. இந்த அரசியல் நெருக்கடிகளுக்கு முடிவு கட்டும் பொருட்டே, அரசுக்கும் எதிரணிக்குழுவுக்கு மிடையே உடன்படிக்கை கைச்சாத்தானது. இதில் ஓர் அம்சமாகவே, தேர்தல் நடத்தப்படலாயிற்று. ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்தில் சவூதி அரேபியா, சிரியா, ஈரான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும், கட்டார் நாட்டு மன்னரும் கலந்து கொண்டனர். நல்லிணக்க உடன்பாட்டை ஏற்படுத்தியவர்களும் இவர்களே ஆவர். புதிய அதிபர் பதவியேற்றுள்ளமையை அடுத்து பல நன்மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மோதல்களால் [illegible] மூடப்பட்டிருந்த உணவகங்கள், மதுபான விடுதிகள் மீளத் திறக்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்கள் நிறைந்து காணப்படுகிறார்கள் என பி.பி.சி.நிருபர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் சேவை ஊழியர் போட்டிப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அமைச்சர் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 27

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் ''ஆ'' தொகுதி தரம் 1 ''ஆ'' பதவிகளுக்கு ஆள்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையை வெகுவிரைவில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தோவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி போட்டிப் பரீட்சைக்கு யாழ்.குடாநாட்டில் இருந்து விண்ணப்பித்துள்ளவர்கள் நேற்று அமைச்சர் டக்ளஸ் தோவானந்தாவைச் சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் அமைச்சர் மேற்படி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அஞ்சல் சேவை ஊழியர்களுக்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 16ஆம் திகதி நடந்து முடிந்துள்ள போதும் யாழ் குடாநாட்டில் இருந்து அப்பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு ஒரு வாரம் கழிந்த நிலையிலேயே போட்டிப் பரீட்சைக்கான அழைப்புக்கள் கிடைத்துள்ளன.

இந் நிலையில் விண்ணப்பதாரிகளின் முறை யீட்டையடுத்து யூன் மாதம்09ம் திகதி கொழும் பில் போட்டிப் பரீட்சை நடத்த ஏற் பாடாகி இருந்த சமயம் தற்போதைய போக்கு வரத்துச் செலவுகள், போக்குவரத்தில் ஈடுபடுவதற் கான சிக்கல்கள் மற்றும் பல்வேறு பிரச்சினை கள் காரணமா கவே இப் போட்டிப் பரீட் சையை வெகு விரைவில் யாழ்ப்பாணத் தில் நடத் துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தோவா னந்தா தபால்தொலைத்தொடர்புகள் அமைச் சருடன்தொலைபேசி மூலம்தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளார். (அ)

## கப்பல் பயண ஏற்பாடு

வடமாகாண பொதுநிர்வாக அமைச்சி னால் நியமனம் செய்யப்பட்ட 41 முகாமைத் துவ உதவியாளர்களும் திருகோணமலைக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை செல் வதற்கு கப்பல் பிரயாண ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக் கப்படுகிறது.

நியமனம் பெற்ற அலுவலர்கள் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார் (அ-2)

## இராணுவத் தீர்வில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்க் அமைப்பின் பல தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர்.காஷ்மீர் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலான விவகாரம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை, காஷ்மீர் பிரச்சினைகளுக்கு இடையிலான அடிப்படை வித்தியாசம் என்னவென்றால் இலங்கை உள்விவகாரம்; காஷ்மீர் இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் இடையிலான பிரச்சினை - என அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை மேற்கொள்ளத் தான் முயன்றார் எனவும், எனினும் தற்போதைய அரசு இராணுவத் தீர்வில் மாத்திரம் ஆர்வம் கொண்டுள்ளது எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

## இராணுவத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். சந்தேகத்திற்குரிய தடயங்கள் இருப்பின் உடன் இராணுவத்தினரின் அவசர தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்து சமாதானத்தை நிலை நாட்ட வேண்டும் எனும் தீர்மானத்தில் ஜனாதிபதி உறுதியாகவுள்ளார். மக்களும் அதற்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டும். இப்படியான தாக்குதல்கள் மூலம் நாட்டில் இனக் கலவரமொன்றை ஏற்படுத்த புலிகள் முயற்சிக்கின்றனர். மக்கள் இதுவிடயத்தில் கவனமாகச் செயற்படவேண்டும் - எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## மின் கட்டணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கை மின்சார சபையின் கீழ் இயங்கும் சகல திணைக் களங்களிலும் ஏற்படும் அனாவசிய மின் பாவனைகளை உடனடியாகக் குறைக்குமாறு நாம் அறிவுறுத்தியிருக்கின்றோம்.

முகாமைத்துவக் கட்டமைப்பில் ஏற்படும் தேவையற்ற செலவுகளை முற்றாகக் கட்டுப்படுத்துவதன் மூலம் வருடாந்தம் ஐந்நூறுகோடி ரூபாவரை சேமிக்க முடியும்.

எனவே, எரிபொருட்களின் விலை அதிகரித்தாலும் தற்போதைக்கு மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும் சாத்தியக்கூறு இருக்காது - என்று கூறப்பட்டுள்ளது. (சி)


**தொழிற் பயிற்சிகள்**

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ **Mobile Phone Repairing**
Hard Ware — Hard Ware Repairing
Soft Ware — Phone Lock — காலம்:- 1 மாதம்

★ **Diploma in Hard Ware Engineering**
காலம்:- 3 மாதங்கள்

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் றிப்பெயறிங்
சகல இன றேடியோக்கள், ரெலிவிசன், வீடியோடெக், CD, Amp திருத்துதல் பயிற்சியளிக்கப்படும் — காலம்:- 9 மாதங்கள்

★ ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன்கள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். — காலம்:- 6 மாதங்கள்

★ எலக்ரிக்கல் வயறிங், றிவைண்டிங், வீட்டு மின் வேலை, மோட்டார், Fan,Transformer வைண்டிங் செய்யப்படும் முறை பயிற்சியளிக்கப்படும்
காலம்:- 6 மாதங்கள்

ஆரம்பம்:- 30.05.2008 (வெள்ளி)
01.06.2008 (ஞாயிறு)

**JAFFNA TECHNICAL INSTITUTE**
இல. 45, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0212226434, 0779254078


# தீகவாபியில் அமைக்கப்பட்ட வீடுகளை முஸ்லிம்களுக்குப் பகிர்ந்தளிக்கத் தடை!

## உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு

கொழும்பு, மே 27

அம்பாறை,தீகவாபிப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்படும் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஐந்நூறு வீடுகளைக் கட்டி, அவற்றை முஸ்லிம்களுக்கு மட்டும் விநியோகிப்பதன் மூலம் அப்புனித பிரதேசத்தை முஸ்லிம் மயப்படுத்த நடவ டிக்கை எடுக்கப்படுகிறது எனத் தெரி வித்து, அதனை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

அத்துடன், அந்த வீடுகளைப் பகிர்ந்தளிப்பதற்கும், அந்த வீடுகளைப் பெறுபவர்களின் பட்டியலைத் தயாரிப்பதற்கும் உயர்நீதிமன்றம் இடைக் காலத் தடை உத்தரவு விதித்தது.

இந்த மனு உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்கா, நிமால் காமினி அமரதுங்க, கே. ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள் ளப்பட்டபோதே இந்த உத்தரவு விடுக் கப்பட்டது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. எல்லாவெல மேதானந்த தேரர் உட்பட 'தீகவாபியைப் பாதுகாப்போர் சங்கம்' என்ற அமைப்பைச் சேர்ந்த பிரமுகர்கள் இந்த மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக் கல் செய்திருந்தனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோரைக் குடியமர்த்துதல் என்ற பெயரில் தீகவாபி புனித பிரதேசத்தில் ஐந்நூறு வீடுகள் புதிதாகக் கட்டப்படுகின்றன என்று மனுவில் சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்கள், இந்த வீடுகளில் எவையும் தமிழர்களுக்கோ, சிங்களவர்களுக்கோ வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்த வீடுகள் அனைத்தையும் முஸ்லிம்களுக்கு வழங்குவதன் மூலம் தீகவாபி புனித பிரதேசத்தை முஸ்லிம் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் அதைத் தடுத்து நிறுத்துமாறும் அவர்கள் கோரினர்.

## மட்டக்களப்பில்..

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

வியாழக்கிழமை இடம்பெற்ற வன்முறைகளைத் தொடர்ந்து ஆட்கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. வீதிகள் வெறிச் சோடி ஹர்த்தால் நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டன. இதனையடுத்து அங்கு பதற்றமான சூழ்நிலை தொடர்ச்சியாக நிலவிவருகின்றது.

## கிளைமோர்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வர்த்தக நிலையங்கள் நேற்றுப் பெருமளவில் இயங்கவில்லை என்று தகவல் தெரிவித்தன.

எனினும், போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் சில சேவையில் ஈடுபட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கிளைமோர்த் தாக்குதல்களில் பாடசாலை மாணவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்படப் பலர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (சி)

## மன்னாரில்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

னரங்க நிலைகள் மீது நேற்றுக்காலை 8.30 மணியளவில் விமானப்படையி னரின் எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல்களை நடத்தின.

அப்பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின்பதுங்குகுழிகளைஇலக்குவைத்தே இத்தாக்குதல்கள் நடத்தப்பட் டன என்று படைத்தரப்பில் தெரிவிக்கப் பட்டது. (சி)

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சி கொழும் பில் மாட்டு வண்டி ஊர்வலம் ஒன்றை நடத்துகிறது.

கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பிருந்து இன்று பிற்பகல் 3 மணிக்கு இந்த ஊர்வலம் ஆரம் பமாகும் என்றும் நகரில் பல முக்கிய இடங்கள் ஊடாக அது செல்லும் என்றும் ஐ.தே.கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறும் என்றும் அவர் கூறினார்.

இதைத் தொடர்ந்து இந்த எதிர்ப்புப் போராட்டம் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்படும் என்று கூறிய திஸ்ஸ அத்தநாயக்க எரிபொருள்களின் விலையைக் குறைக்கும் வரை அல்லது அதற்குப் பதிலாக மக்களுக்கு மானியம் வழங்கும் வரை இப் போராட்டம் தொடரும் என்றும் குறிப்பிட் டார்.


**எம்புறோடிங் ரை**



நீண்ட கால பாவனைக்கு உத்தரவாதம்
பாடசாலை மாணவர்களுக்குரிய ரை
69.00 லிருந்து
எஸ் . எஸ். யசோதரன் ஆட்ஸ்
212,கோவில் வீதி, நல்லூர்



**தேவை**

★ அலுவலக உதவியாளர் (clerk) (பெண்)
★ Computer typing (DTP) தெரிந்தவர்கள் (பெண்) நேரில் வரவும்.

நாவலர் இன்ஸ்ரி ரியூட்


## ரயில் குண்டு...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை 5 மணியளவில் அலுவலக நேரம் முடிந்து பொதுமக்கள் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் - பயணிகள் நிரம்பி வழிந்த ரயிலில் - அது ஓடிக்கொண்டிருந்த போது ஒரு பெட்டியில் இந்த அனர்த்தம் நேர்ந்திருக்கின்றது.

கொழும்பு மருதானையில் இருந்து மாலை 4.25 மணியளவில் புறப்பட்டு பாணந்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயில், தெஹிவளை ரயில் நிலையத்தை அடைவதற்குச் சற்று முன்னர் திடீரெனக் குண்டு வெடித்தது.

பயணிகள் நிரம்பியிருந்த ஐந்தாவது பெட்டியில் குண்டு வெடித்தது. குற்றுயிரும் குறையுயிருமாக டசின் கணக்கான பயணிகள் அந்த இடத்திலேயே சரிந்தார்கள். குண்டுவெடித்த ரயில் பெட்டி ஒரு கணத்தில் பலத்த சேதமுற்றது. அருகில் இருந்த மற்றொரு பெட்டியும் பாதிப்புற்றது.

படுகாயமடைந்தோர் பொதுமக்களினதும், பாதுகாப்புப் படையினரதும் உதவியுடன் அவசர அவசரமாகக் களுபோவில வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டனர்.

## மூதூரில் மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் இரண்டாயிரம் மீனவர் கள் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட மையை அடுத்து மூதூரில் கடற்றொழிலுக்கான தடையையும், கெடுபிடிகளையும் படையினர் தளர்த்தியிருந்தனர்.

ஆனால் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வாக்களிப்பன்று - மே பத்தாம் திகதி அதிகாலை - திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் சீனக்குடாவை அண்டித் தரித்திருந்த கடற்படைக் கப்பல் ஒன்று கடற்புலிகளினால் தகர்க்கப்பட்டது.

இதையடுத்து அடுத்தநாள் 11ஆம் திகதி முதல் அப்பகுதியில் கடற்றொழிலுக்குத் தடை விதிக்கும் உத்தரவு படைத்தரப்பால் விடுக்கப்பட்டது.

இதை ஆட்சேபித்தே கடற்றொழிலாளர்கள் நேற்று ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கடற்றொழில் தடையால் பாதிக்கப்பட்டுள்ள தங்களுக்கு உரிய நிவாரண உதவிகளை வழங்கவேண்டும் என்றும் -

கடற்றொழிலில் ஈடுபட்ட தங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் - ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

கடந்த பத்தம் திகதிக்குப் பின்னர் 20, 21ஆம் திகதிகளில் மட்டும் கடற்றொழிலில் ஈடுபடப் படையினர் தங்களை அனுமதித்தனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மூதூர் மசூதியிலிருந்து ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்து பிரதேச செயலாளர் அலுவலகம் சென்று அங்கு மகஜரை கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் பொலிஸார் அதனை அனுமதிக்காது வழிமறித்து ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

பொலிஸார் ஒலிபெருக்கிகளை பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர் களை கலைந்துசெல்லுமாறு கேட்டதாகவும், உயர்அதிகாரிகள் பேச்சுகளை மேற்கொண்டு உரிய தீர்வைப் பெற்றுத்தருவார்கள் என அவர்கள் வாக்குறுதியளித்தனர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (உ)

## ஆர்ப்பாட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளார். காயமடைந்த மூன்று பேரும் ஏறாவூர் வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் அறியமுடிகிறது.

### இரண்டாவது நாளாகவும் ஹர்த்தால்

ஏறாவூர் பிரதேசத்தில் நேற்று (திங்கட்கிழமை) இரண்டாவது நாளாகவும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுத் திங்கட்கிழமை அலுவலகதினமாக இருந்தபோதிலும், அரச அலுவலங்கள், பாடசாலைகள், வங்கிகள் யாவும் மூடப்பட்டிருந்ததுடன், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வாகனப்போக்குவரத்துகள் இடம் பெற்றன. தொடர்ச்சியாக இரண்டு தினங்களாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஹர்த்தால் காரணமாக ஏறாவூர் பிரதேசத்தில் இயல்பு நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

கடத்தல் சம்பவங்களினால் ஏற்பட்டுள்ள பதற்றநிலையைத் தடுப்பதற்காகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் மாலைவேலையில் ஏறாவூர்ப் பொலிஸ் ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எல்லைப் பிரதேச மக்கள் இரவு வேளைகளில் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர்.

### ஏனைய பகுதிகளிலும் பதற்றம்

அதேவேளை நேற்றுத் திங்கட்கிழமை வர்த்தக நிலையங்களைத் திறக்குமாறு பள்ளி வாசல்களில் உள்ள ஒலி பெருக்கி மூலமாக அறிவிக்கப்பட்டபோதிலும் நிலைமை வழமைக்குத் திரும்பவில்லை . காத்தான்குடி, ஆரையம்பதி மற்றும் ஓட்டமாவடி ஆகிய பகுதிகளில் நேற்றும் பதற்றமான சூழ்நிலை தொடர்ந்து காணப்பட்டதாக அறியமுடிந்தது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.